

கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர், மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# பகவத் தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை ஜூன்/2011 ₹ 15/-

## சங்கீர்த்தன சிறப்பிதழ்





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்

மலர் 3, இதழ் 6

ஜுன் 2011

2 மஹாமந்திரம், ஒரு விளக்கம்

4 நாமாசாரியர், ஸ்ரீல ஹரிதாஸ தாகூர்

8 திருநாம உச்சாடனத்தின் பலன்கள்

14 நீரில் நடக்கும் யோகி

16 மனிதன் கடவுளாக முடியுமா?

20 பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மறைந்த விதம்

22 ஜபம் செய்வதும் கவனம் சிதறுவதும்

25 பகவத் கீதை உண்மையுருவில், ஒரு கண்ணோட்டம்—அத்தியாயம் ஆறு

29 ஸ்ரீமத் பாகவதம்

**பகவத் தரிசனம்**

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே பகவத் தரிசனம்.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், மதுமதி பிரியா தேவி தாஸி, இராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** ஸ்ரீ கேசவ தாஸ்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, மும்பை.

**பதிப்பகத்தார் அலுவலகம்:** ஹரே கிருஷ்ண நிலம், ஜுஹு சாலை, மும்பை - 400 049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

## கேள்விகளும் கருத்துகளும்

**பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# மஹா மந்திரம்


## —ஒரு விளக்கம்

வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று சொல்வதால் உண்டாகும் தெய்வீக ஒலியதிர்வானது, நம்முடைய கிருஷ்ண உணர்வைப் புதுப்பிப்பதற்கான மிகச்சிறந்த வழிமுறையாகும். ஆத்மாக்களான நாம் அனைவரும் உண்மையில் கிருஷ்ண உணர்வுடையவர்கள். ஆனால் நினைவிற்கெட்டாத காலம்தொட்டு இருந்துவரும் பௌதிகத் தொடர்பின் காரணத்தினால், நமது உணர்வானது பௌதிக சூழ்நிலையில் தற்போது களங்கமடைந்துள்ளது. தற்போது நாம் வாழ்ந்துவரும் பௌதிக சூழ்நிலை, மாயை, அல்லது அறியாமை என்று அழைக்கப்படுகிறது. மாயை என்றால், "இல்லாத ஒன்று" என்று பொருள்படும். மாயை என்பது என்ன? இந்த ஜட இயற்கையின் எஜமானராக இருக்க நாம் அனைவரும் முயற்சி செய்கிறோம், ஆனால் உண்மையில் மாயையின் கடுமையான சட்டத்தின் பிடியில் நாம் இருந்து வருகிறோம்—இதுவே அறியாமை. ஒரு சேவகன் எல்லா சக்திகளும் பொருந்திய எஜமானரைப் போல செயற்கையாக நடிக்க முயற்சி செய்வது அறியாமை. வாழ்க்கை குறித்த களங்கமான இந்த எண்ணத்துடன், இயற்கையின் வளங்களை நாம் நம் சுயநலத்திற்காக உபயோகிக்க முயன்று வருகிறோம்; ஆனால் உண்மையில் நாம் மாயையின் சிக்கலான சூழ்நிலையில் மேன்மேலும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இயற்கையை வெல்வதற்கான கடின உழைப்பில் நாம் ஈடுபட்டிருந்தாலும், நாம் எப்பொழுதும் அதையே மேன் மேலும் நம்பியிருக்கிறோம். நமது கிருஷ்ண உணர்வை புதுப்பிப்பதன் மூலம் ஜட இயற்கைக்கு எதிரான இந்த மாயையான போராட்டத்தினை உடனடியாக நிறுத்திவிட முடியும்.

கிருஷ்ண உணர்வு என்பது செயற்கையான ஒன்றை மனதில் திணிப்பது அல்ல; இந்த உணர்வானது உயிர்வாழிகளின் இயற்கையான சக்தியாகும். இந்த தெய்வீக ஒலியதிர்வை கேட்கும்போது, நமது உணர்வானது புதுப்பிக்கப்படுகிறது. இந்த வழிமுறையினை தற்போதைய யுகத்திற்காக அதிகாரிகள் சிபாரிசு செய்கின்றனர். நமது அனுபவத்தில்கூட, விடுதலை பெறு வதற்கான மிகச்சிறந்த மந்திரமான இந்த மஹா மந்திரத்தை உச்சரிப்பதால், ஆன்மீகத் தளத்திலிருந்து வரும் தெய்வீக இன்ப வெள்ளத்தை உடனடியாக உணரலாம். புலன்கள், மனம், புத்தி ஆகிய நிலைகளைக் கடந்து ஆன்மீக அறிவின் தளத்தில் உண்மையாக நிலைபெறும்போது, ஒருவன் தெய்வீகத் தளத்தினை அடைகிறான். ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் இந்த மஹா மந்திர உச்சாடனம் ஆன்மீகத் தளத்திலிருந்து வருவதால், இந்த ஒலியதிர்வானது புலன்கள், மனம்,



மற்றும் புத்தியைச் சார்ந்த அனைத்து சூழ்நிலை உணர்வுகளையும் தாண்டி நிற்கின்றது. ஆகவே, மஹா மந்திரத்தின் மொழியை அறிந்துகொள்ள வேண்டிய அவசியமோ, எவ்வித மனக் கற்பனையோ, அறிவை வைத்து அனுசரிப்பதோ அவசியமில்லை. இஃது ஆன்மீகத் தளத்திலிருந்து வருவதால், எவ்வித முன் தகுதியுமின்றி இந்த நாம சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டு, பரவசத்தில் ஆட முடியும்.

இதை நடைமுறையில் கண்டுள்ளோம். இந்த நாம சங்கீர்த்தனத்தில் ஒரு குழந்தையும் பங்கேற்க முடியும், ஒரு நாய்கூட கலந்துகொள்ள முடியும். ஜட வாழ்க்கையில் மிகவும் சிக்கியுள்ளவருக்கு வேண்டுமானால், இந்நிலைக்கு வர சற்று கால தாமதம் ஆகலாம். ஆனால் அவ்வாறு பௌதிகத்தில் மூழ்கியுள்ள மனிதரும் ஆன்மீகத் தளத்திற்கு வெகு விரைவில் உயர்த்தப்படுகிறார். பகவானின் தூய பக்தர் இந்த மஹா மந்திரத்தை அன்போடு உச்சரிக்கும்போது, இதைக் கேட்பவர்கள் மிகச்சிறந்த பலனை அடைகிறார்கள். இதனால் இந்த நாம உச்சாடனத்தை கடவுளின் தூய பக்தரின் திருவாயிலிருந்து கேட்க வேண்டும், இதனால் உடனடிப் பலனை அடைய முடியும். பக்தரல்லாதவர்களின் கீர்த்தனத்தைக் கேட்பதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். பாம்பினால் தீண்டப்பட்ட பால் விஷத்தின் தன்மையைப் பெறுகிறது.

ஹரா என்னும் சொல் இறைவனின் சக்தியைக் குறிக்கின்றது; க்ருஷ்ண, ராம என்னும் சொற்கள் இறைவனைக் குறிக்கின்றன. க்ருஷ்ண என்றாலும் ராம என்றாலும் "மிகவுயர்ந்த ஆனந்தம்" என்று பொருள். இறைவனின் மிகவுயர்ந்த ஆனந்த சக்தியான ஹரா, விளிச்சொல்லாகும்போது ஹரே என்று மாற்றமடைகின்றது. இறைவனின் மிகவுயர்ந்த ஆனந்த சக்தியானது இறைவனை அடைவதற்கு நமக்கு உதவுகிறாள்.

மாயை என்றழைக்கப்படும் பௌதிக சக்தியும் கடவுளின் சக்திகளில் ஒன்றே. உயிர்வாழிகளாகிய நாமும் கடவுளின் சக்திகளே, நாம் நடுத்தர சக்திகள் என்றழைக்கப்படுகிறோம். உயிர்வாழிகள் பௌதிக சக்தியைவிட உயர்ந்தவர்களாக விளக்கப்படுகின்றனர். உயர்ந்த சக்தியானது தாழ்ந்த சக்தியோடு தொடர்புகொள்ளும் போது, பொருத்தமில்லாத சூழ்நிலை உருவாகிறது; ஆனால் உயர்ந்த நடுத்தர சக்தியானது ஹரா எனப்படும் உயர்ந்த சக்தியோடு தொடர்புகொள்ளும்போது, உயிர்வாழி தனது இயற்கையான மகிழ்ச்சியான நிலையில் வைக்கப்படுகிறான்.



நாம சங்கீர்த்தனத்தில் குழந்தைகள்கூட பங்கேற்க முடியும்

ஹரே, கிருஷ்ண, ராம என்னும் இந்த மூன்று வார்த்தைகள் மஹா மந்திரத்தின் தெய்வீக விதைகளாக அமைகின்றன. இம்மஹா மந்திரத்தை உச்சரித்தல், கட்டுண்ட ஆத்மாவிற்குப் பாதுகாப்பு அளிக்கும்படி இறைவனுக்கும் அவரது அந்தரங்க சக்தியான ஹராவிற்கும் விடுக்கப்படும் வேண்டுகோளாகும். தாயை எதிர்பார்த்த குழந்தையின் உண்மையான அழுகையைப் போன்றதுதான் இந்த உச்சாடனம். உன்னத தந்தையான ஹரியின் அல்லது கிருஷ்ணரின் கருணையைப் பெறுவதற்கு, அன்னை ஹரா பக்தனுக்கு உதவுகிறாள். இதனால் இந்த மந்திரத்தை நேர்மையுடன் உச்சரிப்பவர்களுக்கு பகவான் தன்னை வெளிப்படுத்துகிறார்.

எனவே, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை உச்சரிப்பதைத் தவிர, ஆன்மீக உணர்வை அடைவதற்கு இக்கலி யுகத்தில் வேறு எந்த வழிமுறையும் பயனுள்ளதாக அமையாது.

## உலகமெல்லாம் சென்று திருநாமத்தை ஓதுங்கள்

**பண்டிப் பெரும் பதியை ஆக்கி, பழி பாவம்**
**கொண்டு, இங்கு வாழ்வாரைக் கூறாதே, எண் திசையும்**
**பேர்த்த கரம் நான்கு உடையான் பேர் ஓதி, பேதைகாள்!**
**தீர்த்தகரர் ஆமின்-திரிந்து.**

அறிவில்லாதவர்களே! பொய்யர்கள் தங்கள் வயிற்றைப் பெரிய ஊர்போல கருதி, பழி பாவ உண்டியை நிரப்புவர்; அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதை நிறுத்துங்கள். எட்டுத் திசைகளையும் கவர்ந்து உலகளந்து நான்கு திருத்தோள்களையுடைய பெருமானின் திருநாமங்களை ஓதி, உலகமெல்லாம் சென்று அவ்விடங்களைப் புனிதமாக்குவீர்.

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதி, 2195)

# நாமாசாரியர்

## ஸ்ரீல ஹரிதாஸ தாகூர்

வழங்கியவர்: திருமதி. கீதா கோவிந்த தாஸி

நாமாசாரியர் என்னும் சமஸ்கிருத சொல், நாம, ஆசாரியர் என்னும் இரு சொற்களின் கூட்டுச் சொல்லாகும். நாம என்பது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தைக் குறிக்கும். ஆசாரியர் என்றால் தன்னுடைய நன்னடத்தையின் மூலம் மற்றவர்களுக்கு போதிப்பவர் என்று பொருள். ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தை தானும் உச்சரித்து மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுப்பவரை நாமாசாரியர் என்று அழைக்கலாம். பகவான் சைதன்யர் தனது முக்கியமான சீடர்களில் ஒருவரான ஹரிதாஸ தாகூருக்கு இப்பட்டத்தைச் சூட்டி கௌரவித்தார்.

ஹரிதாஸ தாகூர் தற்போதைய சத்-கிரா மாவட்டத்திலுள்ள (முற்காலத்தில் குல்னா பகுதியின் கிளையாக இருந்த) புடான் என்னும் கிராமத்தில் ஓர் இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்தார். சைதன்ய மஹாபிரபுவைவிட 35 வருடங்கள் மூத்தவரான இவர், வங்காளதேசத்தில் தனது கிராமத்தில் சிலகாலம் வசித்த பின்னர், சாந்தி பூருக்கு அருகிலுள்ள புலியா என்னும் குக்கிராமத்தில் வசிக்கத் தொடங்கினார். அங்கு சிறு வயதிலேயே அத்வைத ஆச்சாரியரின் சங்கம் கிடைத்ததால் பெருமகிழ்ச்சி அடைந்தார், அவரது கருணையால் இஸ்லாமிய மதத்தையும் சமூகத்தையும் பெற்றோரையும் துறந்தார், தலையை மொட்டையடித்து எளிமையான உடையுடுத்தி முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணருடனான தனது நித்திய உறவைப் புதுப்பிக்கும் செயல்களில் ஈடுபடத் தொடங்கினார்.

அவரது புனிதமான பக்தித் தொண்டினை சாதாரண மக்கள் மதமாற்றம் என்ற தவறான கண்ணோட்டத்துடன் பார்த்தனர். பௌதிகமான மதச் செயல்களுக்கும், பகவானுக்குச் செய்யும் ஆன்மீகமான பக்தித் தொண்டிற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. ஹரிதாஸ தாகூர் இஸ்லாமியர்களின் சங்கத்தை விடுத்து பிராமண வாழ்க்கை முறையை மேற்கொண்டபோதிலும், பிராமணக் கொள்கைகளின் மீது அவர் அதிகமாகப் பற்று வைக்கவில்லை. உண்மையில், பல பிராமணர்கள் அவரை வெறுத்தனர். ஹரிதாஸர் சாஸ்திர விதிகளைக் கடைப்பிடிப்பதில்லை என்றும், தத்துவங்களின் வாத விவாதங்களில் கலந்து கொள்வதில்லை என்றும், வெறுமனே குகைகளில் தனியே அமர்ந்து சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றும், தீண்டத்தகாதவரின் குடும்பத்தில் பிறந்தவர் என்றும், ஜாதியின் அடிப்படையில் தங்களை பிராமணர்களாகக் கூறிக்கொள்பவர்கள் குற்றம் சாட்டினர்.

ஆனால் ஹரிதாஸரோ எந்தவொரு வேற்றுமையும் பார்க்காமல், வழியில் காணும் அனைவருடனும் பழகுவார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எல்லோர் இதயத்திலும் பரமாத்மாவாக இருப்பதை உணர்ந்து, பகவத் கீதையில் (5.18) கூறப்பட்டிருப்பதுபோல, ஒரு பிராமணரையும் நாயையும் சமமாகப் பார்க்கும் உயர்ந்த நிலையில் அவர் இருந்தார்.

யஸ் து ஸர்வாணி பூதானி
ஆத்மன்யேவானுபஷ்யதி
ஸர்வ-பூதேஷு சாத்மானம்
ததோ ந விஜுகுப்ஷதே

“எவனொருவன் தான் காணும் அனைத்தையும் இறைவனுடன் தொடர்புபடுத்திப் பார்க்கிறானோ, எல்லா உயிர்வாழிகளையும் அவருடைய அம்சமாகப் பார்க்கிறானோ, பகவானை



ஒரிசாவின் பூரி நகரிலுள்ள சித்த-பகுள் என்னும் இடத்திலுள்ள ஸ்ரீல ஹரிதாஸ தாகூரின் மூர்த்தி

**ஒருவன் எத்தகைய குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அவன் வைஷ்ணவனாக மாறிவிட்டால், அவனது எல்லா பாவங்களும் உடனடியாக விலக்கப்பட்டு அவன் மிகவும் உயர்ந்த நிலையை அடைகிறான்.**

எல்லாவற்றினுள்ளும் பார்க்கிறானோ, அவன் எந்தப் பொருளையும் எந்த உயிர்வாழியையும் வெறுப்பதில்லை." (ஸ்ரீ ஈஷோபநிஷத், மந்திரம் 6)

முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரின் மீது ஹரிதாஸருக்கு இயல்பாகவே இருந்த அன்பினால், தனது உறவுகளைத் துறந்து வாழ்ந்தார்—வெறும் மத மாற்றத்தினால் அல்ல. ஜட ஆசைகளை நிறைவேற்ற ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றி, பின்னர் அதே ஆசைகளுக்காக மற்றொரு மதத்திற்கு மாற்றம் பெறுபவர்களிடமிருந்து இவர் முற்றிலும் வேறுபட்டவர். நெருப்பிலிருந்து எவ்வாறு ஒளியைப் பிரிக்க முடியாதோ, அவ்வாறே பகவானுக்குச் செய்யப்படும் அன்புத் தொண்டை ஜீவன்களிடமிருந்து யாராலும் அழிக்க முடியாது. சநாதன தர்மம் எனப்படும் அந்த அன்புத் தொண்டில் ஹரிதாஸர் ஈடுபட்டார்.

கௌடிய வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஹரிதாஸர், பிரம்மா மற்றும் மஹாதபரின் (ருசிக்க முனிவரின் மகன்) இணைந்த அவதாரமாகக் கருதப்படுகிறார். ஒருமுறை மஹாதபர் துளசி இலையை கழுவாமல் பகவானுக்கு அர்ப்பணித்தார், அதனால் கோபம் கொண்ட அவரது தந்தை ருசிக்க முனிவர் அவரை மறு பிறவியில் மிலேச்சராகப் (தாழ்ந்த குலத்தவராகப்) பிறக்கும்படி சபித்ததாக *கௌர-கணோத் தேஷ தீபிகா* (93–95) கூறுகிறது.

பக்திவினோத தாகூர் எழுதியுள்ள நவதீப தாம மஹாத்மியத்தில் பிரம்மா எவ்வாறு ஹரிதாஸ தாகூராக மாறினார் என விளக்கப்பட்டுள்ளது. துவாபர யுகத்தில் கிருஷ்ணர் தனது கோபால நண்பர் களுடன் விளையாடியதைக் கண்ட பிரம்மா, அவரை சோதிக்க நினைத்து கோபர் களையும் கன்றுகளையும் சுமேரு மலையில் ஒளித்து வைத்தார். ஒரு வருடம் கழிந்த பின்பு, பகவான் எப்போதும் போல கோபாலர்களுடனும் கன்றுகளுடனும் இருப்பதைப் பார்த்து தான் செய்த தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டார். கிருஷ்ணர் கலி யுகத்தில் கௌரங்கராக வருவார் என்பதை அறிந்த பிரம்மா, மீண்டும் தவறிழைத்து விடுவோமோ என்ற பயத்தில், அந்தர்-த்வீபம், அதாவது நவத்வீபத்தின் மத்திய தீவில் சென்று தவம் செய்ய ஆரம்பித்தார். அவரைப் புரிந்து கொண்ட பகவான், தனது கௌர லீலையில் மிலேச்சனாகப் பிறந்து, திருநாமத்தின் பெருமையை பிரச்சாரம் செய்து, அனைத்து உயிர்வாழிகளுக்கும் மங்களம் உண்டாக்குவாய் என கூறினார். இவற்றிலிருந்து, படைக்கும் கடவுளான பிரம்மதேவனின் அவதாரமே ஹரிதாஸ தாகூர் என தெரிகிறது.

ஹரிதாஸ தாகூர் இளம் வயதிலேயே அத்வைத ஆச்சாரியரின் சீடரானார், அவருக்கு ஹரிதாஸர் (கடவுளின் சேவகர்) என்று பெயர் சூட்டி கிருஷ்ணரின் நாமத்தை ஜபித்தால் கருணை கிடைக்கும் என்று அத்வைதர் உபதேசித்தார். அதன்படியே ஹரிதாஸரும் ஹரி நாமத்தை தினமும் மூன்று இலட்சம் முறை ஜபித்து வந்தார். (ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஒருமுறை உச்சரித்தால், அதில் 16 திருநாமங்கள் உள்ளன. 108 முறை ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபித்தால், அஃது ஒரு சுற்று என்று அறியப்படுகிறது. அவ்வாறு 64 சுற்றுகள் ஜபிக்கும்போது, அஃது ஏறக்குறைய ஒரு இலட்சம் நாமங்கள் என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதன்படி ஹரிதாஸர் தினமும் (64x3) 192 சுற்றுகள் ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரித்து வந்தார்.)

ஹரிதாஸருக்கும் அத்வைதருக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பைப் பற்றியும் அத்வைதரின் வீட்டில் ஹரி தாஸர் உண்பது பற்றியும் ஊரெங்கும் பேசப்பட்டது. பிராமண சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் (அத்வைதர்) தாழ்ந்த குல இஸ்லாமியரை (ஹரிதாஸரை) தூர ஒதுக்கி வைக்க வேண்டும் என்ற சமுதாயக் கொள்கையை அத்வைதர் கடைப்பிடிக்காமல் இருந்ததால் குழப்பம் உண்டாகியது. உயர்ந்த பிராமண சமுதாயத்திலிருந்து வந்த அத்வைத ஆச்சாரியர், இளம் ஹரிதாஸ தாகூரின் தூய்மையான பக்தியைப் பாராட்டிய காரணத்தினால், அவர் எந்த ஜாதியிலிருந்து வந்தார் என்பதை சிறிதும் பொருட்படுத்தாமல் அவருடன் பழகி வந்தார். ஒருவன் எத்தகைய குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அவன் வைஷ்ணவனாக மாறிவிட்டால், அவனது எல்லா பாவங்களும் உடனடியாக விலக்கப்பட்டு அவன் மிகவும் உயர்ந்த நிலையை அடைகிறான் என்று அத்வைத ஆச்சாரியர் பலமுறை எடுத்துரைத்தார்.

ஹரிதாஸரின் புகழ் எங்கும் பரவியது, அவரின் தரிசனத்திற்காக பல்வேறு பக்தர்கள் வந்தனர். ஆனால் பொறாமை கொண்ட ஜாதி பிராமணர்களோ அப்பகுதியை ஆண்டு வந்த காஜியிடம் புகார் கூற, காஜி ஆளுநரிடம் புகார் கொடுத்தான். இஸ்லாமிய மதத்தில் பிறந்து இந்து மதத்தவனாக செயல்படுவதை கண்டிக்க வேண்டும் என்று நினைத்த ஆளுநர், உடனடியாக ஹரிதாஸரைக் கைது செய்ய உத்தரவிட்டான். ஹரிதாஸரைப் பின்பற்றிய நன்மக்கள் அவரது நிலையைக் கண்டு மிகவும் பயந்தனர், ஆனால் மரண பயம் சற்றும் இல்லாத ஹரிதாஸரோ சிப்பாய்களோடு அமைதியாக சிறைக்குச் சென்றார். சிறையில் ஏற்கனவே

அடைக்கப்பட்டிருந்த பல்வேறு இந்துக்கள், ஹரிதாஸரைக் கண்ட மகிழ்ச்சியில், அவருடன் இணைந்து பஜனை செய்தனர். அவர்களிடம் ஹரிதாஸர், "எப்போதும் இப்படியே இருங்கள்," என வாழ்த்தினார். அவர்கள் சற்று குழம்பியதைப் பார்த்தபோது, "இப்போது நீங்கள் பக்தியில் ஈடுபட்டுள்ளீர். சிறையை விட்டு வெளியில் வந்தால், உலக விஷயங்களில் ஈடுபட்டு பகவானை மறந்துவிடுவீர்கள். நீங்கள் எப்போதும் கிருஷ்ணரின் நினைவில் இருக்க வேண்டும். வாழ்வில் எது நடந்தாலும் பகவானின் திருநாமத்தை ஜபம் செய்து கொண்டு அவரை மறக்காமல் இருக்க வேண்டும்," என்று விளக்கினார்.

ஹரிதாஸர் ஆளுநரின் முன்பு நிறுத்தப்பட்டபோது, அவருடைய தெய்வீக அழகைப் பார்த்து வியந்த ஆளுநர் மிகுந்த மரியாதை கொடுத்து, "என் அன்பு சகோதரனே, கடவுளின் கிருபையால் உயர்ந்த இஸ்லாமிய குலத்தில் பிறந்த நீ ஏன் இப்படி நடக்கிறாய்? கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு மீண்டும் இஸ்லாமிய மதத்திற்கு வந்து விடு," என்று கூறினான். இதைக் கேட்டு பலமாக சிரித்த ஹரிதாஸர், "நீங்கள் பௌதிக விஷயங்களால் மதிமயங்கிய நபரைப் போல பேசுகிறீர்கள். இஸ்லாமியருக்கும் பிராமணர்களுக்கும் பெயரில் மட்டுமே வித்தியாசம் உள்ளது. கடவுள் இத்தகைய பிரிவுகளுக்கு அப்பாற்பட்டவர். அனைத்து மத நூல்களிலும் கடவுளிடத்தில் தூய அன்பை வளர்க்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மதங்களுக்கு அப்பாற்பட்டவனாக, கடவுளின் அன்பை அடைவதே வாழ்வின் மிகவுயர்ந்த குறிக்கோள் என்ற கருத்திற்கு ஏற்ப நான் செயல்பட்டு வருகிறேன். என்னுடைய இந்த நடத்தையில் ஏதேனும் தவறு இருந்தால், எல்லா வழிகளிலும் என்னை தண்டிப்பதற்கு உங்களுக்கு பூரண அதிகாரம் உள்ளது," என்று கூறினார்.

அங்கு குழுமியிருந்த அனைவரும் ஹரிதாஸரின் இனிமையான பதிலைக் கேட்டு மகிழ்ந்தனர். ஆனால் அசுர குணம் படைத்த ஒருவன், "நம்முடைய புனிதமான மதத்திற்கு களங்கம் வருவதற்குள் இந்த துர்குணம் படைத்தவனை தண்டியுங்கள்," என்று கூறினான். பக்தர்கள் எவ்வளவு கெஞ்சியும் அவர்கள் ஹரிதாஸரை விடவில்லை. 22 சந்தைகளில் அவரை சாட்டையால் அடித்தனர். ஆனால் எந்த வலியையும் உணராமல், அவர் தொடர்ந்து நாம ஜெபம் செய்து கொண்டிருந்தார். எவ்வளவு அடித்தும் இவர் மரணமடையவில்லையே என்று சிப்பாய்கள் சலித்துக் கொண்ட போது, அவர்களுக்கு கஷ்டம் கொடுக்க வேண்டாம் என எண்ணிய ஹரிதாஸர், மெய் மறந்த நிலைக்குச் சென்றார். அவர் இறந்துவிட்டதாக நினைத்த சிப்பாய்கள் அவரை கங்கையில் வீசினர். புனித கங்கையில் விழுந்த அவர், சற்று தூரம் பயணம் செய்த பின்னர், மயங்கிய நிலையிலிருந்து வெளி வந்தார். பக்தர்கள் அவரைச் சூழ்ந்து நாம சங்கீர்த்தனம் செய்து ஆடத் துவங்கினர். பகவானின் பக்தர்கள் துன்பத்தையும் மரணத்தையும் கண்டு அஞ்சுவதில்லை. ஆனால் பக்தர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களை பகவான் பொறுப்பதில்லை. ஹரிதாஸருக்கு ஓர் அடிகூட விழாமல் அனைத்தையும் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு தாங்கினார். இத்தகவலை மஹாபிரபு ஹரிதாஸரிடம் கூறியபோது, தன்னால் பகவானுக்கு கஷ்டம் ஏற்பட்டதை நினைத்து ஹரிதாஸர் மயங்கி விழுந்தார். தன் பக்தனுக்காக எதையும் தாங்குவேன் என புன்னகை பூத்த முகத்துடன் பதிலளித்தார் பகவான் சைதன்யர்.

ஹரிதாஸருக்கு நித்யானந்தரின் சங்கம் கிடைத்தபோது, அவர்கள் இருவரும் ஹரி நாமத்தை பிரச்சாரம் செய்வதில் ஈடுபட்டனர். பிராமண குடும்பத்தில் பிறந்திருந்தபோதிலும், அனைத்து தீயப் பழக்கங்களுடன் வாழ்ந்து வந்த ஜகாய், மதாய் என்ற இரு துஷ்டர்களை இவர்கள் பக்தர்களாக மாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். ஒருமுறை ஹரிதாஸரின் குகையில் மிகவும் கொடிய பாம்பு ஒன்று நுழைந்தபோதிலும், அதனால் சிறிதும்



*ஸ்ரீல ஹரிதாஸ தாகூரை மயக்குவதற்காக அனுப்பப்பட்ட விலைமாது, அவரை அணுகும் காட்சி*

பாதிக்கப்படாமல், அது இருப்பதைக்கூட அறியாமல் அவர் தொடர்ந்து ஜபம் செய்தார்.

ஹரிதாஸரை மயக்குவதற்காக ஜாதி பிராமணர்களும் இஸ்லாமிய அதிகாரிகளும் இணைந்து ஒரு விலைமாதுவை அவருடைய இடத்திற்கு அனுப்பினர். இல்லத்திற்கு வந்த விலைமாதுவிடம் ஜபம் செய்து விட்டு வருவதாக ஹரிதாஸர் கூறினார். ஹரிதாஸரோ இரவு, பகல் என்று நாள் முழுவதும் ஜபம் செய்பவராயிற்றே! இவ்வாறாக, ஜபத்திலேயே மூன்று நாள்கள் கழிந்தது. ஹரிதாஸரின் தூய்மையான சங்கத்தினால் விலைமாதுவும் தூய பக்தையானாள். தன்னுடைய சொத்துகளை தானம் செய்துவிட்டு, ஆன்மீகப் பாதைக்கு வந்தாள். ஹரிதாஸர் அவளை துளசிக்கு முன்பாக ஜபம் செய்யச் சொல்லி விட்டுச் சென்றார்.

ஹரிதாஸ தாகூர் தனது இறுதி நாள்களில் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் சங்கத்தில் பூரியில் வசித்தார். இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்ததால் பூரியிலுள்ள ஜகந்நாதரின் கோவிலுக்குள் அவர் அனுமதிக்கப்படவில்லை; கோபுரத்தில் இருக்கும் சக்கரத்தை வெளியில் இருந்தபடியே தரிசித்து, நாம ஜபத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். இருப்பினும், சாக்ஷாத் ஜகந்நாதரான ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு ஹரிதாஸரைச் சந்திக்க தினமும் அவரது இருப்பிடத்திற்கே வருவார், தினமும் அவருக்கு பிரசாதம் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்தார்.

வயதாகிவிட்ட காரணத்தினால் ஹரி நாமத்தை தினமும் மூன்று இலட்சம் முறை சொல்வது ஹரிதாஸருக்கு கடினமானதாயிற்று. மேலும், ஸ்ரீ சைதன்யர் இவ்வுலகில் நீண்டநாள் இருக்கப் போவதில்லை என்பதையும் உணர்ந்த ஹரிதாஸர் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கு அனுமதி கோரினார். "தாங்கள் மிகவுயர்ந்த நபர். நீங்கள் இங்கிருந்து புறப்பட்டால், அஃது இவ்வுலகிற்கு பெரும் நஷ்டத்தை விளைவிக்கும்," என்று சைதன்யர் வாதாடினார். ஹரிதாஸரோ, "நான் முக்கியத்துவமற்றவன், "ஓர் எறும்பு இறந்தால், யாருக்கு என்ன நஷ்டம்? நான் செல்வதால், எந்த நஷ்டமும் இல்லை," என்று பதிலளித்தார்.

மறுநாள் நிகழ்ந்த நாம சங்கீர்த்தனத்தின்போது, மஹாபிரபுவின் திருவடிகளை இதயத்தில் பதித்து, அவரது திருமுகத்தை உற்று நோக்கியபடி, "ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய" என கூவிக் கொண்டே ஹரிதாஸர் மறைந்தார். அவரின் திவ்ய உடலினை மஹாபிரபு தமது கரங்களாலேயே அடக்கம் செய்தார்.

"ஒரு வைஷ்ணவன் மரணமடைகிறான் என்று கூறுபவன் முட்டாள்; நாம சங்கீர்த்தன ஒலியில் அவன் என்றும் வாழ்கிறான்; வைஷ்ணவன் வாழ்வதற்காக மடிகிறான்; வாழும்போது திருநாமத்தை உலகமெங்கும் பரப்புகிறான்" என்று ஹரிதாஸ தாகூரின் சமாதியில் ஸ்ரீல பக்திவினோத தாகூர் எழுதியுள்ளார். ஜகந்நாத பூரியில் ஹரிதாஸ தாகூரின் சமாதியையும், அவர் ஜபம் செய்து வந்த சித்த-பகுள் என்ற இடத்தையும் இன்றும் தரிசிக்கலாம்.

ஹரிதாஸ தாகூர் *நாமாசாரியர்* என்னும் பெயருக்கேற்ப வாழ்ந்து காட்டினார். அவரைப் பின்பற்றி இவ்வுலகின் மத பேதங்களை நாமும் துறக்க வேண்டும். பகவான் கிருஷ்ணர் தன்னை இந்து, கிறிஸ்துவன், அல்லது முஸ்லீம் என்று கூறவில்லை, அவர் மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவர். அவர் நம்மிடமிருந்து தூய்மையான பக்தித் தொண்டை எதிர்பார்க்கிறார், பக்திக்கு லௌகீகத் தகுதிகள் ஏதும் தேவையில்லை. ஹரிதாஸ தாகூரை எளிமையாகப் பின்பற்றி நடந்தால் மிகவும் உன்னதமான கிருஷ்ண பிரேமையை நம்மில் யார் வேண்டுமானாலும் அடையலாம் என்பது உறுதி.

*திருமதி. கீதா கோவிந்த தாஸி, வேலூர் நகரத்தைச் சார்ந்தவர்; கணிப்பொறி வல்லுநராகப் பணியாற்றும் தன் கணவருடன் தற்போது பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகிறார்.*





இடது: மறைந்த ஹரிதாஸரின் உடலைத் தாங்கியபடி மஹாபிரபுவும் அவரது சகாக்களும் கீர்த்தனம் செய்தல்
வலது: பூரியின் கடற்கரையில் அமைந்துள்ள ஹரிதாஸரின் சமாதி

# திருநாம உச்சாடனத்தின் பலன்கள்

*தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையினரால் "Chant and be Happy..." என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள புத்தகத்தின் எட்டாம் அத்தியாயம்*

இன்றைய மனோதத்துவம் (Psychology Today) என்னும் பத்திரிகையின் துணை ஆசிரியரும், பலவகை தியான அனுபவங்கள் (The varieties of Meditative Experiences) என்னும் புத்தகத்தின் ஆசிரியருமான Dr. டேனியல் கோலமன் அவர்கள், கிருஷ்ண பக்தி இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்களின் தியான முறைகளை ஆராய்ந்த பின்னர், "ஹரே கிருஷ்ண பக்தர்கள், ஒற்றுமையாகவும் நண்பர்களாகவும் பயனுள்ள மனிதர்களாக இருப்பதையும் நான் கண்டேன். பௌதிக முன்னேற்றத்தில் மூழ்கி, ஆன்மீக முன்னேற்றத்தை ஏறக்குறைய முற்றிலும் நிராகரித்துவிட்ட நமது கலாச்சாரத்தில், இவர்களுடைய தியானப் பயிற்சியிலிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம்" என்று கூறியுள்ளார்.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு நல்ல ஆரோக்கியம் தேவை என்பதை அனைவரும் அறிவர். நமது உடலை உறுதியாகவும் தகுதியாகவும் வைத்துக் கொள்ள முறையான உணவு, மிதமான உடற்பயிற்சி, போதுமான ஓய்வு ஆகியவை அவசியமாகின்றன. இத்தேவைகளை நாம் புறக்கணித்தால், நம்முடைய உடல் பலவீனம் அடைவது மட்டுமின்றி நோய் எதிர்ப்பு சக்தியும் குறைகிறது. இதனால் தொற்றுக் கிருமிகள் எளிதில் பற்றிக்கொள்ள, விரைவில் நாம் நோய்வாய்ப்படுவோம்.

உள்ளிருக்கும் ஆத்மாவின் ஆன்மீக ஆரோக்கியமானது இதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது, ஆனால் மக்களோ ஆன்மீக ஆரோக்கியத்தைக் கண்டுகொள்வதில்லை. நாம் நம்முடைய ஆன்மீக ஆரோக்கியத்திற்கான தேவைகளைப் புறக்கணித்தால், மனக்கவலை, வெறுப்பு, தனிமை, பாரபட்சம், பேராசை, சலிப்பு, பொறாமை, கோபம் போன்ற விரும்பத்தகாத பௌதிக குணங்களால் ஆட்கொள்ளப்படுவோம்.

ஆத்மாவின் இந்த சூட்சுமமான தொற்று நோய்களை வெற்றிகொள்ள வேண்டுமெனில், வேத இலக்கியங்களில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதுபோல், ஆன்மீக பலத்தையும் தெளிந்த சிந்தனையையும் அடிப்படையாகக் கொண்ட, தன்னையறியும் செயல் திட்டம் ஒன்றினை நாம் நமது வாழ்வில் இணைக்க வேண்டும்.

மன ரீதியிலும் ஆன்மீக ரீதியிலும் தன்னிறைவை வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான உன்னத சக்தி ஏற்கனவே நம் ஒவ்வொருவரின் உள்ளும் இருக்கிறது. இருப்பினும், அந்த சக்தியானது ஓர் உண்மையான ஆன்மீக முறையால் வெளிப்படுத்தப்பட வேண்டும். அத்தகு அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளில், ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தினை தியானம் செய்வதே மிகவும் சக்தி வாய்ந்த வழிமுறை என்று காலத்தைக் கடந்த வேதங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரிப்பதால் ஏற்படும் ஆரம்ப விளைவு குறித்து, ஸ்ரீல பிரபுபாதர் பகவத் கீதையின் மீதான தனது வியாக்கியானத்தில் பின்வருமாறு கூறுகிறார்: "எவரெல்லாம் கிருஷ்ணரின் திருநாமங்களை (ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே) உச்சரிக்கின்றார்களோ, அவர்கள் காலப்போக்கில் ஒருவித தெய்வீக இன்பத்தை உணர்வதையும், வெகு விரைவில் எல்லாவித ஜடக்



நாம சங்கீர்த்தனத்தைத் தொடக்கி வைத்த பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு தனது சகாக்களுடன்

களங்கங்களிலிருந்தும் தூய்மையடைவதையும் நாங்கள் எங்களது அனுபவத்தில் கண்டுள்ளோம்."

திருநாமத்தை உச்சரிப்பவர், தூய சிந்தனையையும் மன அமைதியையும் வேண்டாத பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலையையும் தனது ஆரம்ப நிலையிலேயே உணரலாம். தனது சிந்தனைகளை நாம உச்சாடனத்தினால் மேலும் வளர்த்துக்கொள்ளும்போது, உண்மையான ஆன்மீக நிலையைப் பற்றி தெரிந்து கொள்கிறார். இத்தகு எழுச்சி பெற்ற நிலையில், தூய மனதைக் கொண்டு ஆத்மாவைக் காண முடியும் என்றும், தன்னில் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும் என்றும் பகவத் கீதை கூறுகின்றது.

கிருஷ்ண பக்தி இயக்கத்தை முதலில் தோற்றுவித்த ஸ்ரீ சைதன்யரின் வாழ்வையும் உபதேசங்களையும் உள்ளடக்கிய *ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம்* என்னும் நூலில், திருநாமத்தைச் சொல்வதால் ஏற்படும் மிகவுயர்ந்த நன்மையைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. "கிருஷ்ணரின் மீதான அன்பை எழச் செய்தல், தெய்வீக ஆனந்தத்தைச் சுவைத்தல்—இவையே திருநாமத்தை உச்சரிப்பதால் விளையும் பலன்கள். இறுதியில், கிருஷ்ணரின் சங்கத்தைப் பெற்று, கிருஷ்ண பிரேமை (கிருஷ்ணரின் மீதான ஆழ்ந்த அன்பு) என்னும் கடலில் ஒருவன் தன்னை மூழ்கடித்து, அவருடைய பக்தித் தொண்டில் ஈடுபடுகிறான்."

எனவே, ஹரே கிருஷ்ண நாமத்தினால் எண்ணற்ற பலன்களைப் பெறலாம், இப்பலன்கள் கிருஷ்ண உணர்விலும் கிருஷ்ண பிரேமையிலும் முடிவுறுகின்றன. மந்திர தியானம் செய்யும் வழிமுறையை ஏற்று, அதனை முறையாகக் கடைப்பிடிப்பதால், ஜபம் செய்வதன் பலன்களை நாம் உணர முடியும். நாமத்தைச் சொல்வதன் படிப்படியான விளைவுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்காக இதன் முக்கியமான நன்மைகளில் சிலவற்றைப் பற்றி தனியாக விவாதித்துள்ளோம்.

### மன அமைதி

ஆரம்பநிலையில் தியானம் என்பது மனதைக்கட்டுப்படுத்துவதைமையமாகக் கொண்டது; ஏனெனில், நமது பொதுவான நிலையில் நாம் நம் மனதினால் உண்டாக்கப்படும் விசித்திரமான எண்ணங்கள், விருப்பங்கள், மற்றும் உணர்வுகளுக்கு அடிமைகளாக உள்ளோம். ஏதோ ஒரு விஷயத்தை நாம் நினைத்த மாத்திரத்தில், அதனை செயல்படுத்த விரும்புகிறோம். ஆனால், "மனதை வென்றவனுக்கு மனமே சிறந்த நண்பன்; மாறாக, அவ்வாறு செய்யத் தவறுபவனுக்கோ மனமே மிகப்பெரிய எதிரி," என்று நமக்கு எடுத்துரைக்கும் பகவத் கீதை (6.6), யோகியானவன் தனது மனதைக் கட்டுப்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

பௌதிகத்தில் மூழ்கியுள்ள மனமானது, புலன்களைக் கொண்டு ஜடத்தையும் ஜட உறவுகளையும் அனுபவிக்க முயற்சிக்கின்றது. அத்தகு மனம் புலனுகர்ச்சிக்கான திட்டங்களால் நிறைந்துள்ளது. மேலும், ஓயாமல் அமைதியற்று இருப்பதால், புலனின்பத்திற்கான ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு தொடர்ந்து தாவிக் கொண்டே உள்ளது. அவ்வாறு தாவிக் கொண்டே இருக்கும்போது, பௌதிகப் பலனை அடைவதற்கான ஏக்கம், அதனை இழக்கும்போது ஏற்படும் துக்கம் (அல்லது விரக்தி) ஆகிய நிலைகளுக்கு இடையில் மனம் சிக்கித் தவிக்கின்றது.

பகவத் கீதையில் (2.66), "தெய்வீக உணர்வில் நிலைபெறாமல், தெய்வீக அறிவையோ கட்டுப்பாடான மனதையோ அடைய முடியாது. இவையின்றி அமைதிக்கு வழியில்லை. அமைதி இல்லாவிடில் ஆனந்தம் எவ்வாறு உண்டாகும்?" என்று கிருஷ்ணர் வினவுகிறார். ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபம் செய்வதால், மனம் நம்மைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, நாம் மனதைக் கட்டுப்படுத்த முடியும்.

*மந்த்ர* என்பது ஒரு சமஸ்கிருத சொல். *மன்* என்றால் "மனம்" என்றும், *த்ர* என்றால் "விடுவித்தல்" என்றும் பொருள்படும். ஆகவே, மந்திரம் என்பது மனதை ஜட வாழ்வின் கட்டுண்ட நிலையிலிருந்து விடுவிப்பதற்கான சக்தி கொண்ட தெய்வீக ஒலியதிர்வுகளைக் குறிக்கும்.

**கடவுளின் சொந்த உயர் சக்திகளால் நிரப்பப்பட்டுள்ள இந்த ஹரே கிருஷ்ண மந்திரமானது, மனதின் எல்லாவித தொல்லைகளையும் சமாளிக்கும் சக்தியுடையதாகும்.**

ஸ்ரீமத் பாகவதத்தின் விளக்கவுரையில், ஸ்ரீல பிரபுபாதர், "ஜட விஷயங்களின் மீதான நமது பந்தப்பட்ட நிலை ஜட ஓசையின் மூலமாகத் தொடங்கியது," என்று தெரிவிக்கின்றார். ஒவ்வொரு நாளும் நாம் பல்வேறு ஜட ஓசைகளை வானொலி, தொலைக்காட்சி, நண்பர்கள், உறவினர்கள் என பல இடங்களிலிருந்து கேட்கிறோம். அவ்வாறு கேட்பதன் அடிப்படையில், நாம் செயல்படுகிறோம். ஆனால், "ஆன்மீக உலகத்திலும் ஓசை உள்ளது. நாம் அந்த ஓசையை அணுகினால், நமது ஆன்மீக வாழ்க்கை தொடங்கும்," என்று ஸ்ரீல பிரபுபாதர் சுட்டிக் காட்டுகிறார். நாம் நமது மனதை தூய்மையான ஹரே கிருஷ்ண மந்திரத்தின் ஆன்மீக ஒலியதிர்வுகளில் நிலைநிறுத்திமனதைக்கட்டுப்படுத்தினால், இந்த மனதானது அமைதியடையும். இசையானது எவ்வாறு ஒரு கொடூரமான இதயத்தை சாந்தப்படுத்துகிறதோ, அவ்வாறே மந்திரத்தின் ஆன்மீக ஓசையானது அமைதியற்ற மனதை சாந்தப்படுத்துகிறது. கடவுளின் சொந்த உயர் சக்திகளால் நிரப்பப்பட்டுள்ள இந்த ஹரே கிருஷ்ண மந்திரமானது, மனதின் எல்லாவித தொல்லைகளையும் சமாளிக்கும் சக்தியுடையதாகும். நீர்நிலையிலுள்ள சஞ்சலமற்ற நீரானது

எவ்வாறு தெளிவாக சலனமற்று இருக்குமோ, அதுபோல, நமது மனமானது ஜட ஆசைகளால் அலைக்கழிக்கப்படாமல் இருக்கும்போது, தெளிவாகவும் தூய்மை யாகவும் இருக்கும். மனமானது தன் தூய நிலையில், தூசி துடைக்கப்பட்ட நிலைக் கண்ணாடியைப் போன்று, உண்மையான பிம்பத்தைச் சிதறாமல் வழங்குகின்றது; அதன் மூலம் நாம் மேலும் ஆழமாகச் சென்று, வாழ்வின் அனுபவங்களில் மிகவும் முக்கியமானதான ஆன்மீக குணங்களை அறிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

## தன்னைப் (ஆத்மாவைப்) பற்றிய ஞானம்

உணர்வே ஆத்மா இருப்பதற்கான அறிகுறி என்று வேதங்கள் கூறுகின்றன. ஆத்மா தனது தூய நிலையில் ஆன்மீக உலகில் வாழ்கிறான்; ஆனால் அவன் அங்கிருந்து வீழ்ச்சியுற்று ஜடத்துடன் தொடர்பு கொள்ளும்போது, அஹங்காரம் என்னும் மாயையினால் கவரப்படுகின்றான். நமது உணர்வினை மயக்கும் இந்த அஹங்காரமானது நம்மை ஜடவுடலுடன் அடையாளப்படுத்தும்படி செய்கிறது. ஆனால் நாம் உண்மையில் ஜடவுடல்கள் அல்ல. நமது கைகளையும் கால்களையும் பார்க்கும்போது, "இஃது என் கை, இஃது என் கால்" என்று நாம் கூறுகிறோம். எனவே, "நான்" என்னும் உணர்வு உடலின் உரிமையாளரைக் குறிக்கும். அறிவுடன் நோக்கினால் இவ்வுண்மையை எளிமையாகப் புரிந்துகொள்ளலாம். மேலும், திருநாமத்தைச் சொல்வதால் ஏற்படும் ஆன்மீக உணர்வினால், இந்த உண்மையை நேரடியாகவும் இடைவிடாமலும் உணர முடியும்.

உயிர்வாழி தன்னை இந்த ஜடவுட லோடு அடையாளப்படுத்திக் கொள்ளும் போது, அவனது உண்மையான ஆன்மீக நிலையை மறக்கின்றான்; இறப்பு, வயோதிகம், நோய் ஆகியவற்றைக் கண்டு அச்சப்படுகிறான்; அழகு, அறிவு, பலம் ஆகியவற்றை இழந்துவிடுவோம் என்றும் அச்சப்படுகிறான்; மேலும், எண்ணிலடங்காத கவலைகளையும் மன உளைச்சலையும் அனுபவிக்கின்றான்—இவையாவும் தற்காலிகமான உடலைச் சார்ந்தவையே. ஆனால் திருநாமத்தை சொல்வதால், ஆரம்ப நிலையில்கூட, நாம் இந்த ஜடவுடலிலிருந்து வேறுபட்டவர்கள் என்பதையும், தூய்மையான மாற்றமில்லாத ஆன்மீக ஆத்மா என்பதையும் உணர முடியும். ஏனெனில், இந்த மந்திரமானது முற்றிலும் தூய்மையான ஆன்மீக ஒலியாகும், நமது உணர்வினை அதன் உண்மையான களங்கமற்ற நிலைக்குக் கொண்டு செல்லும் சக்தி இம்மந்திரத்திற்கு உண்டு. இந்த தருணத்தில், பொறாமை, மூடநம்பிக்கை, கர்வம், காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு, ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலிருந்து நாம் மீள்வோம். "ஆத்மா பிறப்பற்றவன், நித்தியமானவன், எப்போதும் நிலைத்திருப்பவன், இறப்பற்றவன், ஆதியானவன்," என்று பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணர் கூறுகிறார். உடல் சார்ந்த நமது போலியான அடையாளம் மறையும்போது, நாம் நமது தெய்வீக வாழ்வினை உணரத் தொடங்குகிறோம். அப்போது இயற்கையாகவே பௌதிக வாழ்வின் எல்லாவித பயத்திலிருந்தும் கவலைகளிலிருந்தும் விடுபடலாம். அதன் பின்னர், "நான் அமெரிக்கன், நான் ரஷ்யன், நான் கருப்பன், நான் வெள்ளையன்," என்று நாம் நினைக்க மாட்டோம்.

உண்மையான தன்னுணர்வை அடைவது எல்லா உயிர்வாழிகளின் ஆன்மீக இயற்கையைக் காண்பதற்கான ஆற்றலை நமக்கு வழங்குகின்றது. நமது இயற்கையான ஆன்மீக உணர்வுகள் உயர்வடையும்போது, எல்லா உயிரினங்களிலும் இருக்கும் ஒற்றுமையை நம்மால் அனுபவிக்க முடியும். இதுவே முக்தியடைந்த மனிதன் என்பதற்கான பொருளாகும்; மற்ற உயிர்வாழிகளின் மீதான விரோத மனப்பான்மை, பொறாமை ஆகியவற்றி லிருந்து, ஆன்மீக உணர்வின் மூலம் நாம் விடுபடுவோம்.

இந்த உயர் பார்வையினை "பிரகலாதரின் திவ்ய உபதேசங்கள்" என்னும் நூலில், ஸ்ரீல பிரபுபாதர் பின்வருமாறு விளக்குகின்றார்: "கிருஷ்ண



ஹரி நாம உச்சாடனத்தில் ஈடுபடுவோர், உடல் சார்ந்த போலியான அடையாளங்களைக் கைவிட்டு, பௌதிக கவலைகளிலிருந்து விடுபட்டு, "நான் அமெரிக்கன், நான் ரஷ்யன், நான் கருப்பன், நான் வெள்ளையன்," போன்ற எண்ணங்களைக் கைவிடுகின்றனர்.

உணர்வை முழுமையாகப் பெற்றவன், 'இவன் மனிதன், மிருகம், நாய், பூனை, புழு' என்றெல்லாம் எண்ணுவதில்லை. அவன் ஒவ்வொருவரையும் கிருஷ்ணரின் அம்சமாகக் காண்கிறான். இது பகவத் கீதையில் நேர்த்தியாக விளக்கப் பட்டுள்ளது: 'கிருஷ்ண உணர்வை உண்மையில் கற்றவன் பிரபஞ்சத் திலுள்ள அனைவரையும் நேசிப்பவனா கிறான்.' கிருஷ்ண உணர்வுத் தளத்தில் நிலைபெறாதவரை, உலக சகோதரத் துவம் என்ற கேள்விக்கே இடமில்லை.''

## உண்மையான மகிழ்ச்சியை நல்கக்கூடியது

ஒவ்வொருவரும் உண்மையான, நிரந்தரமான மகிழ்ச்சியைத் தேடுகின்றனர். ஆனால் தற்காலிகமான பௌதிக இன்பமோ வரம்பிற்கு உட்பட்டது. பாலைவனத்தில் உள்ள சின்னஞ்சிறு நீர்த் துளிகளுக்கு இஃது ஒப்பிடப்படுகிறது. இது நமக்கு நிரந்தரமான நிவாரணத்தை வழங்குவதில்லை. ஏனெனில், பௌதிக உணர்ச்சிகளும் உறவுகளும் ஆத்மாவின் ஆன்மீகத் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்கு உகந்தவை அல்ல. ஆனால் ஹரே கிருஷ்ண மந்திரம் நம்மை கடவுளுடனும் அவரது ஆன்மீக ஆனந்த சக்தியுடனும் நேரடியாக இணைப்பதால், அதனை உச்சரித்தல் நமக்கு பூரண திருப்தியை வழங்குகின்றது. கடவுள் பூரண ஆனந்தமுடையவர்; அவருடன் நாம் உறவுகொள்ளும்போது, நாமும் அந்த தெய்வீக ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

திருநாமத்தை உச்சரிப்பதால் வரும் ஆனந்தமானது எவ்வாறு எல்லா பௌதிக நன்மைகளையும் மிஞ்சுகின்றது என்பதைப் பற்றிய ஓர் அற்புதமான நிகழ்ச்சி வேத இலக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருமுறை ஏழை பிராமண பூஜாரி ஒருவர் பௌதிக வரத்தைப் பெறுவதற்காக சிவபெருமானை வழிபட்டார். ஆயினும், சநாதன கோஸ்வாமி என்ற சாதுவிடம் சென்று விரும்பியதைப் பெறுமாறு சிவபெருமான் அவருக்கு அறிவுறுத்தினார். சநாதன கோஸ்வாமியிடம் தங்கத்தை உண்டாக்கும் சக்தி வாய்ந்த சிந்தாமணிக் கல் ஒன்று இருப்பதை அறிந்து, அதை தான் பெற முடியுமா என்று ஏழை பிராமணர் வினவினார். அதற்கு ஒப்புதல் அளித்த சநாதன கோஸ்வாமி, தன்னுடைய குப்பைத் தொட்டியிலிருந்து அதனை எடுத்துக் கொள்ளும்படி கூறினார். அக்கல்லை வைத்து இரும்பைத் தொடுவதன் மூலம் எவ்வளவு தங்கத்தை வேண்டுமானாலும் பெற முடியும் என்பதால், அந்த பிராமணர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அங்கிருந்து சென்றார். ஆனால், ''இந்த சிந்தாமணிக் கல் மிகச்சிறந்த வரமாக இருந்தால், சநாதன கோஸ்வாமி இதனை ஏன் குப்பைத் தொட்டியில் போட்டிருக்க வேண்டும்?'' என்று சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர் சிந்தித்தார்.

தன்னுடைய ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள அவர் சநாதன கோஸ்வாமியிடம் திரும்பி வந்தார். ''உண்மையில் மிகச்சிறந்த வரம் இதுவல்ல, ஆனால் அந்த மிகச்சிறந்த வரத்தை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ள நீ தயாராக உள்ளாயா?'' என்று சநாதனர் வினவினார்.

''ஆம், மிகச்சிறந்த வரத்தைப் பெறுவதற்காகவே நான் தங்களிடம் வந்தேன்,'' என்று ஏழை பிராமணர் பதிலளிக்க, சநாதன கோஸ்வாமி அந்த சிந்தாமணிக் கல்லை அருகிலுள்ள நீரில் வீசிவிட்டு வரும்படி அவரிடம் கூறினார். அவ்வாறே ஏழை பிராமணரும் செய்துவிட்டு திரும்பி வந்தபோது, சாதுக்களில் மேன்மையானவரான சநாதனர், அவருக்கு ஹரே கிருஷ்ண மந்திரத்தின் மூலம் தீட்சையளித்தார். உயர்ந்த ஆன்மீக ஆனந்தத்தை உணர்வதற்கு இதுவே மிகச்சிறந்த வழியாகும்.

## கர்மாவிலிருந்து விடுபடுதல்

ஒருவர் செய்யும் ஒவ்வொரு பௌதிகச் செயலுக்கும் அதற்கு சமமான எதிர்விளைவைக் கொடுக்கக்கூடிய இயற்கையின் சட்டம், கர்ம விதி என்று அழைக்கப்படுகிறது. ''நீ எதை விதைக்கின்றாயோ அதையே அறுவடை செய்வாய்,'' என்று பைபிளில்கூட சொல்லப்பட்டுள்ளது.

ஜடச் செயல்களை விதைகளுக்கு ஒப்பிடலாம். முதலில் விதைகள் விதைக்கப்படுகின்றன, அவை காலப் போக்கில் சிறிது சிறிதாக பலன்களை அளிக்கின்றன. செயல்கள், விளைவுகள் என்னும் இவ்வலையில் சிக்கி, கர்ம விதியை அனுபவிப்பதற்காக ஒரு ஜடவுடலிலிருந்து வேறொரு ஜடவுடலை



நாம சங்கீர்த்தனம் உண்மையான மகிழ்ச்சியை நல்கக்கூடியது

# ஒரு வாணலியில் வறுக்கப்படும் விதைகள் எவ்வாறு தங்களது முளைக்கும் திறனை இழக்கின்றனவோ அவ்வாறே கர்ம விளைவுகளும் கடவுளின் திருநாமங்களின் சக்தியினால் செயலிழக்கின்றன.

நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சிரத்தையான முறையில் கிருஷ்ணரின் தெய்வீக நாமங்களை ஜபம் செய்வதால், கர்மாவிலிருந்து விடுதலை பெறுவது சாத்தியமாகும். கடவுளின் திருநாமங்களில் தெய்வீக சக்தி நிறைந்திருப்பதால், திவ்யமான அந்த ஒலியதிர்வுகளுடன் உயிர்வாழி தொடர்புகொள்ளும்போது, முடிவற்ற கர்ம சுழற்சியிலிருந்து அவன் விடுவிக்கப்படுகிறான்.

ஒரு வாணலியில் வறுக்கப்படும் விதைகள் எவ்வாறு தங்களது முளைக்கும் திறனை இழக்கின்றனவோ அவ்வாறே கர்ம விளைவுகளும் கடவுளின் திருநாமங்களின் சக்தியினால் செயலிழக்கின்றன. கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர், தன்னுடன் தொடர்பு கொள்ளும் எல்லா வஸ்துக் களையும் தூய்மைப்படுத்தும் அளவிற்கு சூரியன் சக்தி வாய்ந்தது. சூரிய கோளத்தில் நுழையும் எந்தவொரு பொருளும் உடனடியாக நெருப்பாக மாறுகிறது. அதுபோலவே கிருஷ்ணரின் திவ்யமான ஒலியில் நமது சிந்தனை நிலைத்திருக்கும்போது, அவருடைய அந்தரங்க சக்தியானது நமது கர்ம விளைவுகள் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துகின்றது. ஸ்ரீல பிரபுபாதர் ஸ்ரீமத் பாகவதத்திற்கான தனது விளக்கவுரையில், "இந்ததிருநாமங்களை ஜபம் செய்வதாலேயே, ஒருவர் எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் விடுதலை யடைகிறார்; திருநாமம் அவ்வளவு சக்தி வாய்ந்தது," என்று வலியுறுத்துகிறார்.

## மறுபிறவியிலிருந்து விடுதலை

ஆத்மா நித்தியமானது என்றும், அதன் பழைய செயல்களின் காரணத்தினாலும் பௌதிக ஆசைகளின் காரணத்தினாலும் அது வெவ்வேறு ஜடவுடல்களை ஏற்கின்றது என்றும் வேதங்கள் நமக்கு போதிக்கின்றன. நம்மிடம் பௌதிக ஆசைகள் இருக்கும்வரை, கடவுளின் கண்காணிப்பில் செயல்படும் ஜட இயற்கை, ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலை நமக்கு வழங்கிக் கொண்டே இருக்கும். ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுக்கு ஆத்மா மாறுவதே, மறுபிறவி எனப்படுகிறது. உண்மையில் இந்த உடல் மாற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை; ஏனெனில், இப்பிறவியில்கூட நாம் வெவ்வேறு உடல்களைக் கடந்துச் செல்கிறோம். முதலில் நமக்கு ஒரு குழந்தையின் உடல் இருந்தது, பின்னர் அஃது ஓர் இளைஞனின் உடலாக மாறியது. இறுதியில் வயோதிகனின் உடலை அடையப் போவதும் உறுதி. அதுபோலவே, நம்முடைய வயோதிகமான உடல் அழிந்த பிறகு, நாம் புதிய உடல் ஒன்றை அடைவோம்.

நம்முடைய சிந்தனையை ஜட ஆசைகளிலிருந்து விடுவிப்பதால், ஸம்ஸார என்றழைக்கப்படும் முடிவற்ற பிறப்பு, இறப்பு சக்கரத்தின் சுழற்சியிலிருந்து வெளியேறுதல்

## தலை கால் புரியாமல் ஆடுங்கள்

மலையை எடுத்து கல்–மாரி
காத்துப் பசுநிரை–தன்னைத்
தொலைவு தவிர்த்து பிரானைச்
சொல்லிச் சொல்லி, நின்று எப்போதும்,
தலையினோடு ஆதனம் தட்டத்
தடுகுட்டமாய்ப் பறவாதார்
அலை கொள் நரகத்து அழுந்திக்
கிடந்து உழைக்கின்ற வம்பரே



கோவர்தன மலையைத் தூக்கி, கல் மழையிலிருந்து பசுக்களைக் காத்த கோவிந்தனின் நற்செயல்களை எப்போதும் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். இப்படி எம்பெருமானின் குணங்களைப் பாடி ஆடும்போது, தலை தரையிலே படும்படி, மேலும் கீழுமாகப் பறந்து ஆடாதவர்கள், துன்பம் நிறைந்த நரகத்தில் அழுந்திக் கிடந்து வருந்துவார்கள்.

(நாலாயிர திவ்ய பிரபந்தம், நம்மாழ்வார் 3167)

சாத்தியமாகும். ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரிப்பதால் ஆத்மாவின் இயல்பான ஆன்மீக விருப்பங்களுக்கு புத்துணர்வு அளிக்க இயலும். புலனின்பத்தினால் கவரப்படுவது உடலின் தன்மை; அதுபோல, ஆத்மாவின் தன்மை கடவுளால் கவரப்படுவதாகும். ஜபம் செய்வதால் நம்முடைய உண்மையான இறையுணர்வு விழிப்படைகின்றது; மேலும், அவரோடு உறவாடுவதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் ஆவல் பிறக்கின்றது. நமது உணர்வில் ஏற்படும் எளிமையான இந்த மாற்றத்தின் மூலம், பிறவி சக்கரத்திலிருந்து நாம் விடுபடலாம்.

இதனை பகவத் கீதையின் (8.6) மீதான தனது பொருளுரையில் ஸ்ரீல பிரபுபாதர் பின்வருமாறு விவரிக்கின்றார்: "ஒருவன் தனது வாழ்நாளில் எத்தகு சிந்தனைகளுடன் விளங்குகிறானோ, அச்சிந்தனைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து மரண நேரத்தில் அவனுடைய சிந்தனையை வடிவமைக்கின்றன என்பது நிச்சயம். இதனால் ஒருவனது தற்போதைய வாழ்வே அவனது அடுத்த வாழ்வை நிர்ணயிப்பதாகும். ஒருவன் கிருஷ்ணரது தொண்டில் திவ்யமாக ஈடுபட்டிருந்தால், அவனது அடுத்த உடல் திவ்யமாக (ஆன்மீகமாக) இருக்கும், பௌதிகமாக இருக்காது. எனவே, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே எனும் உச்சாடனமே, ஒருவன் தனது வாழ்வின் இறுதியில், தனது நிலையை வெற்றிகரமாக மாற்றிக் கொள்வதற்கான மிகச்சிறந்த வழியாகும்."

## இறுதிப் பலன் இறைவனின் மீதான தூய அன்பு

பூரண இறையுணர்வையும் இறைவனின் மீதான தூய அன்பையும் பெறுவதே நாம உச்சாடனத்தின் இறுதி நோக்கமும் மிகவுயர்ந்த நன்மையுமாகும்.

நம்முடைய சிந்தனை தூய்மையடையும்போது, ஆன்மீக முன்னேற்றம் நிலையானதாக அமையும்—இம்முன்னேற்றத்தினை நம்முடைய நடத்தையிலும் நல்லொழுக்கத்திலும் காண முடியும். சூரியன் கீழ்வானத்தை நெருங்கும்போது, வெப்பமும் ஒளியும் அதற்கு முன்பாகவே வருகின்றன. அதைப் போலவே, கிருஷ்ணரின் திருநாமத்தைப் பற்றிய உணர்ச்சிகள் நமது இதயத்தில் புதுப்பிக்கப்பட்டால், அதிகரிக்கப்பட்ட இந்த ஆன்மீகச் சிந்தனையானது நமது செயல்கள் அனைத்திலும் வெளிப்படும். இறுதியில், கடவுளுக்கும் உயிர் வாழிக்கும் இடையிலான அன்புடன் கலந்த நித்தியமான உறவு மீண்டும் அடையப்படுகிறது. ஜடவுலகத்தில் நுழைவதற்கு முன்பு ஒவ்வொரு ஜீவனுக்கும் கடவுளுடன் ஒரு குறிப்பிட்ட உறவு இருந்தது. அன்பு கலந்த அந்த உறவு, ஜடவுலகில் நாம் அனுபவிக்கும் எந்த அன்பைக் காட்டிலும் பல்லாயிரம் மடங்கு அதிகமானது, ஆழமானது. இது ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதத்தில் (மத்திய லீலை, 22.107) பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது: "கிருஷ்ணரின் மீதான தூய அன்பு ஜீவனின் இதயத்தில் நித்தியமாக இருக்கக்கூடியது, இது வேறு இடத்திலிருந்து பெறப்படுவது அல்ல. ஸ்ரவணத்தினாலும் (இறைவனைப் பற்றிக் கேட்பதாலும்) கீர்த்தனத்தினாலும் (இறைவனின் திருநாமத்தை உச்சரிப்பதாலும்) இதயம் தூய்மையடையும் போது, அந்த அன்பு எழுச்சி பெறுகின்றது."

ஆன்மீக உலகில் நம்முடைய நித்தியமான ஸ்வரூபத்தில், நம்மால் கடவுளுடன் நேரடியாக உறவு கொள்ள முடியும்; நம்முடைய அன்பிற்கும் பக்திக்கும் பொருத்தமான மனோபாவத்துடன் ஆன்மீக உருவில் நாம் அவருக்குத் தொண்டு செய்ய முடியும். ஆன்மீக அன்பின் உறவினால் ஏற்படும் திவ்யமான பரவசத்தில், தூய பக்தன் என்றும் திளைத்திருக்கிறான். இந்த பரவச நிலை *பக்தி ரஸாம்ருத சிந்துவில்* விளக்கப்பட்டுள்ளது. "அச்சமயத்தில் இதயம் சூரியனைப் போன்று பிரகாசமடைகிறது. எல்லா கிரகங்களுக்கும் மேலே அமைந்துள்ள சூரியனை எந்த மேகத்தினாலும் மறைக்கவியலாது. அதுபோலவே பக்தனொருவன் சூரியனைப் போன்று தூய்மையடையும்போது, அவனுடைய இதயத்திலிருந்து சூரிய ஒளியைக் காட்டிலும் புகழத்தக்கதான பரவச அன்பு தோன்றுகின்றது."


(தமிழாக்கம்: ஜெய கோவிந்தராம தாஸ்)


### நாம உச்சாடனத்தின் இருவகைகள்

1. சங்கீர்த்தனம்—மிருதங்கத்தையும் கரத்தாளத்தையும் கொண்டு உரக்கப் பாடுதல்
2. ஜபம்—மென்மையாகத் தனக்கு மட்டுமே கேட்கும்படி உச்சரித்தல்

சங்கீர்த்தனம் என்பது பக்தர்களின் சங்கத்தில் திருநாமத்தை உச்சரிப்பதாகும்; ஒரு பக்தர் முதலில் பாட, மற்ற பக்தர்கள் அவரைப் பின்பற்றி அதே ராகத்தில் மஹா மந்திரத்தைப் பாடுவர்.

ஜபம் என்பது நாம் தினசரி செய்ய வேண்டிய ஒன்றாகும்; பல பணிகள் இருந்தாலும் தினமும் ஜபம் செய்வதற்காக சிறிது நேரத்தை ஒதுக்க வேண்டும். திருநாமத்தை நாம் எத்தனை முறை உச்சரிக்கின்றோம் என்பதை அறிய 108 மணிகள் கொண்ட ஜப மாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. வலது கை கட்டை விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையில் மணியை பிடித்துக் கொண்டு ஜபம் செய்ய வேண்டும். (மேலும் விவரங்களுக்கு இஸ்கான் கோவிலை அணுகலாம்)




நீர்மேல் நடக்கும் யோகி
ஒருமுறை, யோகம் கற்றுத் தருபவரைத் தேடுவதற்காக ஓர் இளைஞன் தனது கிராமத்தை விட்டுச் சென்றான்.
பல இடங்களில் சுற்றி அலைந்த பின்னர், தாம் சந்தித்த பல யோகிகளில் ஒருவரிடமிருந்து இறுதியில் அவன் யோகத்தைக் கற்றுக் கொண்டான்.
அந்த யோகியுடன் பலவருடங்கள் வாழ்ந்து யோகத்தைக் கற்ற பின்னர், தனது கிராமத்திற்கு ஒரு சாதுவின் வடிவில் வந்தான்.
பற்பல ஆண்டுகளுக்குப் பிறகு அவனைப் பார்த்த கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். உரிய மரியாதையை வழங்கிய பின்னர், யோகியிடமிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள் என்று வினவினர்.
கடுமையான தவங்களைச் செய்து இத்தனை ஆண்டுகளாக யோகாவைப் பயிற்சி செய்துள்ளேன். பல வகையான சித்திகள் உள்ளன, அவற்றில் சிலவற்றை நான் அடைந்துள்ளேன்.
எளிமையான கிராம மக்கள் அவன் கூறியதைக் கவனமாகக் கேட்டனர், என்ன சித்திகளைக் கற்றிருக்க முடியும் என்று வியந்தனர்.
தற்பெருமையுடன் அந்த யோகி கூறினான்
நான் நீரின் மீது நடக்கக்கூடிய சித்தியைப் பெற்றுள்ளேன்.







## கருத்து

**பலவகையான யோகிகள் உள்ளனர், ஆனால் யாரொருவன் கிருஷ்ணரிடம் பக்தி கொண்டுள்ளானோ அவனே மிகவுயர்ந்த யோகியாவான். இரண்டு பைசா செலவில் படகைக் கொண்டு நதியைக் கடப்பதற்குப் பதிலாக, பல வருடங்களை யோகத்தில் கழிப்பதில் பலனில்லை. யோக சித்திகளைக் கொண்டு நீரின் மீது நடத்தல், விபூதி வரவழைத்தல், விரும்பிய பொருளைப் பெறுதல், போன்ற சில சாதாரண சித்திகளைப் பெற்று, அதனால் தங்களையே பகவான் என்று கூறிக்கொள்ளும் யோகிகளைக் கண்டு கிருஷ்ண பக்தன் என்றும் ஏமாற்றமடைவதில்லை. சகலவிதமான சக்திகளைப் பெற்றவரும் யோகேஸ்வரன் என்று அழைக்கப்படுபவருமான கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதை மட்டுமே அவன் விரும்புகிறான்.**

# வாசகர் கடிதங்கள்

### அக்னியின் பாதுகாப்பிற்கு சீதை சென்றது எப்படி?

நான் கடந்த மாதம் (ஏப்ரல்) ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாத இதழைப் படித்தேன். அதில் இராமாயணம் சம்பந்தமான கேள்வி பதில்களில், சீதாதேவியைப் போன்ற பதிவிரதைகளை இராவணனைப் போன்ற அரக்கர்களால் தொடவியலாது என்றும், அன்னை சீதை அக்னி தேவரின் பாதுகாப்பில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னை சீதை எப்படி, எப்பொழுது அக்னியின் பாதுகாப்பிற்குச் சென்றார் என்பதை விளக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீ ஹரி கிருஷ்ணன், வேலூர்

### எமது பதில்

கூர்ம புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

ஸீதயாராதிதோ வஹ்னிஷ் சாயா-ஸீதாம் அஜீஜனாத்
தாம் ஜஹார தஷ-க்ரீவ: ஸீதா வஹ்னி-புரம் கதா

பரீக்ஷா-ஸமயே வஹ்னிம் சாயா-ஸீதா விவேஷ ஸா
வஹ்னி: ஸீதாம் ஸமானீய தத்-புரஸ்தாத் அனீனயத்

‘‘சீதாதேவியால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட அக்னிதேவர், சீதையைப் போன்ற ஒரு மாய ரூபத்தை இராவணனின் முன்பு நிறுத்த, பத்து தலை கொண்ட இராவணன் அந்த மாயா சீதையை கடத்திச் சென்றான். உண்மையான சீதை அக்னி தேவரின் இருப்பிடத்திற்குச் சென்றாள். பகவான் இராமச்சந்திரர் சீதையை அக்னிப் பரிட்சைக்கு உட்படுத்தியபோது, அக்னியினுள் நுழைந்தது போலியான மாயா சீதையே. அச்சமயத்தில் உண்மையான சீதையை தனது இருப்பிடத்திலிருந்து அழைத்து வந்த அக்னிதேவர், அவளை ஸ்ரீ இராமரிடம் ஒப்படைத்தார்.’’

அன்னை சீதை எப்படி, எப்பொழுது அக்னியின் பாதுகாப்பிற்குச் சென்றார் என்னும் தங்களது கேள்விக்கான பதில் மேற்கூறப்பட்டுள்ள ஸ்லோகத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

### அற்புதமான பகவத் தரிசனம் இதழ்

தாங்கள் வெளியிடும் மாத இதழான பகவத் தரிசனம் கற்பக தரு போன்றது. கிடைத்தற்கரிய விஷயங்களை உள்ளடக்கி வெளிவருகின்ற இந்த இதழ் மிகவும் பயனுள்ளது. எமது ஹரே கிருஷ்ண அறநெறி பாடசாலையின் மாணவர்கள் தவறாமல் மாதந்தோறும் இந்த சஞ்சிகையினை (பத்திரிகையினை) விருப்பத்துடன் வாங்கிப் படிக்கிறார்கள். எமது அறநெறி பாடசாலைச் சிறார்கள் சித்திரக் கதைகளை விரும்பிக் கற்கிறார்கள். ஆழ்ந்த, இலகுவில் புரிந்துகொள்ள முடியாத விஷயங்களையும் இச்சித்திரக் கதைகள் மூலமாக எளிதில் விளங்கிக் கொள்ள முடிகிறது. இந்த இதழினைப் படிப்பவர்களுக்கு உயர்ந்த சிறப்பான எண்ணங்கள் தோன்றும் என்பது நிச்சயமான உண்மை ஆகும்.

ஹரே கிருஷ்ண அறநெறி பாடசாலை மாணவர்கள்,
கொழும்பு, இலங்கை

# மனிதன் கடவுளாக முடியுமா?




## ஆஸ்திகர்களைப் போன்ற நாஸ்திகர்கள்

கடவுள் மனிதனைப் படைத்தானா, மனிதன் கடவுளைப் படைத்தானா? என்று சிலர் கேள்வி கேட்பதுண்டு. கடவுள் மனிதனைப் படைத்தார் என்று கூறுபவர்கள் ஆஸ்திகர்கள் என்றும், மனிதன் கடவுளைப் படைத்தான் என்று கூறுபவர்கள் நாஸ்திகர்கள் என்றும் அறியப்படுகின்றனர். மனிதன் தனக்கு துன்பம் ஏற்படும்போது, மனநிறைவு அடைவதற்காக, ஏதோ ஓர் உயர் சக்தி இருப்பதாக கற்பனை செய்து, அந்த உயர்சக்தியை ஏதோ ஒரு பெயரைச் சொல்லி அழைக்க, சந்தர்ப்பவசமாக அவனுடைய துன்பங்கள் விலக, இல்லாத அந்த உயர்சக்தியை அவன் கடவுளாக நம்பத் தொடங்குகிறான் என்று நாஸ்திகர்கள் கருதுகின்றனர். ஆஸ்திகர்களோ இந்த உலகத்தையும் மனிதனையும் மற்ற உயிர்வாழி களையும் படைத்த கடவுள், தன்னால் படைக்கப்பட்டவர்கள் தன்னை வணங்கும்போது அவர்களுக்கு நன்மை வழங்கி துன்பத்தைப் போக்குவதாக நம்புகின்றனர்.

நாஸ்திகர்களுக்கும் ஆஸ்திகர்களுக் கும் இடையிலான வாதங்கள் ஒருபுற மிருக்க, மறுபுறம் நாஸ்திக கருத்தும் ஆஸ்திக கருத்தும் இணைந்ததுபோன்ற தோற்றத்துடன் பலர் அவ்வப்போது தோன்றுவதுண்டு. அதாவது, மனிதர் களில் ஒருவரை புனிதர் என்று கருதி, அந்த மனிதனிடம் இருக்கும் சில அதிசய சக்திகளைக் கண்டு மயங்கி, அந்த மனிதனையே கடவுளாக ஏற்று, அவனிடம் பிரார்த்தனை செய்து, சந்தர்ப்பவசத்தினாலோ அந்த மனிதனின் சின்னஞ்சிறு சக்திகளாலோ பணத்தினாலோ பதவியினாலோ அன்பி னாலோ அந்த மனிதனைக் கடவுளாக ஏற்கின்றனர். இவர்கள் நாஸ்திகர்களைப் போன்று கடவுள் இல்லை என்று கூறுபவர்களாக இல்லாவிட்டாலும், சாதாரண மனிதனுக்கு உயர் மதிப்பளித்து, கடவுளாக வழிபடுவதால், வெளியில் பார்ப்பதற்கு இவர்கள் ஆஸ்திகர்களைப் போலத் தோன்றினாலும், உண்மையில் இவர்களும் நாஸ்திகர்களே.

## மனிதக் கடவுள்கள்

கண்ணில் காணாத கடவுளை நம்புவதைவிட, கண்ணில் காணப்படும் கடவுளை நம்புதல் சிறந்தது என்று அவர்கள் தத்துவம் பேசுவதுமுண்டு. பெற்றெடுத்த அன்னை, நோயை குணப்படுத்திய மருத்துவர், பதவி வழங்கிய அரசியல் தலைவர், ரசனைக்குப் பிடித்த சினிமா கலைஞர், கிரிக்கெட் வீரர், மாயாஜாலம் காட்டிய காவியுடையினர் என இப்பட்டியல் நீண்டு செல்லக்கூடியது. சாதாரண மனிதர்களை ஏதோ காரணத்தினால் கடவுளாக ஏற்று வழிபடுவோர், என்றோ ஒருநாள் அந்த மனிதக் கடவுள் (இப்படியும் ஒரு வார்த்தை உண்டோ), மரணத்தைத் தழுவும்போது, இதயமே வெடித்ததுபோன்று மயங்கி நிற்பதைக் காண்கிறோம். கடவுள் யார் என்பதைமுறையாக அறியாத இம்மக்கள், தங்களது கடவுள்(?) மடியும்போது, செய்வதறியாது தவிக்கின்றனர்.

மனிதனைக் கடவுளாக்கும் இந்த மனிதர்களைப் பொறுத்தவரை, கடவுள் என்பவர் தங்களைவிட சற்று உயர் வானவர், அவ்வளவுதான். யாராவது ஒருவர் செல்வந்தராக இருந்து பண உதவி செய்தால், அவர் கடவுளாகி விடுகிறார்; யாராவது ஒருவர் மருத்துவராக இருந்து, மிகவும் ஆபத்தான நிலையிலிருந்த நோயாளியைக் காப்பாற்றினால், அவர் கடவுளாகி விடுகிறார்; யாராவது ஒருவர் மருத்துவராக இல்லாமல், ஏதோ சில சக்திகளின் மூலம் ஏதேனும் நோயை குணப்படுத்தினால், அவர் கடவுளாகி விடுகிறார்; யாராவது ஒருவர் ஏழைக் குழந்தைகளுக்கு உணவோ உடையோ இருப்பிடமோ கல்வியோ வழங்கினால், அவர் கடவுளாகி விடுகிறார்; யாராவது

# சாதாரண மனிதர்களை ஏதோ காரணத்தினால் கடவுளாக ஏற்று வழிபடுவோர், என்றோ ஒருநாள் அந்த மனிதக் கடவுள், மரணத்தைத் தழுவும்போது, இதயமே வெடித்ததுபோன்று மயங்கி நிற்பதைக் காண்கிறோம்.

ஒருவர் சின்னஞ்சிறு பொருள் ஒன்றை மாயாஜாலத்தினாலோ சித்தியினாலோ வரவழைத்தால், அவர் கடவுளாகி விடுகிறார். இறுதியில் பார்த்தால், யாரெல்லாம் ஏதாவது ஒரு விதத்தில் உதவி செய்கிறார்களோ, அவர்கள் கடவுளாகி விடுகின்றனர். சமுதாயத்திற்கு உதவி செய்யும் நல்ல உள்ளம் படைத்தவர்கள் நிச்சயம் பாராட்டத்தக்கவர்கள், ஆனால் அவர்களைக் கடவுள் என்று அழைக்கலாமா? நிச்சயம் கூடாது. அவ்வாறு வழிபடப்படுவோரில் சிலர், தங்களின் உண்மையான நிலையை உணர்ந்து, தாங்கள் கடவுளல்ல என்பதை தெளிவுபடுத்துவர்; ஆனால் சில முட்டாள்களோ, அறியாத மக்களால் 'கடவுள்' என்று அழைக்கப்படும்போது, அதை ஏற்றுக் கொண்டு தங்களையே கடவுளாக அறிவித்து மக்களின் வழிபாட்டையும் பெற்றுக் கொள்கிறார்கள். அந்த மூடர்களை என்னவென்று சொல்வது? ஏமாற்றுக்காரர்கள், அயோக்கியர்கள் என எவ்வாறு கூறினாலும் அவ்வார்த்தைகள் போதுமானவையல்ல.

## கடவுள், எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்?

யாரேனும் ஒருவன் நம்மிடம் வந்து, தன்னை இந்தியாவின் பிரதமர் என்று அறிமுகப்படுத்தினால், நாம் ஏற்றுக்கொள்வோமா? நிச்சயம் இல்லை. அவனை பைத்தியம் என்றோ, ஏமாற்றுக்காரன் என்றோ நினைத்து பொருட்படுத்த மாட்டோம்; அல்லது காவல் துறையில் புகார் கொடுப்போம். ஆனால் திடீரென்று யாரேனும் முன்வந்து, தன்னையே கடவுள் என்று கூறும்போது, அவனை பலர் ஏற்றுக் கொள்கின்றனர். அவனை பைத்தியம் என்றோ, ஏமாற்றுக்காரன் என்றோ பெரும்பாலும் யாரும் நினைப்பதில்லை. இந்தியா என்னும் நாட்டை ஆள்பவன் "நானே" என்று ஒருவன் அறிவிக்கும்போது, அதனை மறுக்கும் மக்கள், கோடிக்கணக்கான பிரபஞ்சங்களை ஆள்பவன் "நானே" என்று ஒருவன் அறிவிக்கும்போது, அதனை ஏற்றுக் கொள்கின்றனர். ஏன்? ஏனெனில், இந்தியாவின் தற்போதைய பிரதமர் திரு.மன்மோகன் சிங் என்பதை அனைவரும் அறிவர்; ஆனால் பிரபஞ்சத்தை ஆள்பவர் யார் என்பதை யாரும் அறிவதில்லை. இந்த மூடத்தனமே பல்வேறு போலிகள் உருவாகுவதற்கு காரணமாக அமைகின்றது. கடவுள் என்பவர் யார், அவரது சக்திகள் யாவை என்பதை நாம் முறையாகப் புரிந்துகொண்டால், ஏமாற்றுக்காரர்களை நாம் என்றும் நம்ப மாட்டோம்.

கடவுள் என்னும் சொல், கட, உள் என்னும் இருசொற்களின் கலப்புச் சொல்லாகும். இதன் பொருள் என்னவெனில், எல்லாவற்றையும் கடந்தவராகவும் எல்லாவற்றின் உள்ளே இருப்பவராகவும் யார் உள்ளாரோ, அவரே கடவுள். நாம் ஏற்றுக்கொள்ளும் கடவுள், இந்த ஜடவுலகத்தின் துன்பங்களைக் கடந்தவராக உள்ளாரா, குறைபாடுகளைக் கடந்தவராக உள்ளாரா, உலகின் உயர்ந்த நபர்கள் அனைவரையும் கடந்தவராக உள்ளாரா என்று நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். மேலும், அவர், ஒவ்வொரு அணுவிற்குள்ளும் உயிருக்குள்ளும் உள்ளாரா என்பதையும் நாம் சோதித்துப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, நாம் வணங்கும் கடவுள் இந்த ஜடவுலகத்தின் துன்பங்களான பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் போன்றவற்றால் அவதிப்பட்டால், அவர் கடவுளல்ல என்பதை உணர வேண்டும். சில மாதங்களுக்கு முன்பு, சுமார் நான்கு வயதே உடைய ஒரு சிறுவனை சில பக்தர்கள் சீண்டிக் கொண்டிருந்தனர். பக்தர் ஒருவரின் சீரிய மகனான அச்சிறுவனிடம், அங்கிருந்த பல்வேறு பக்தர்களைக் காட்டி, "இவர் கடவுள்," "இவர் கடவுள்," "இவரே கடவுள்," என்று கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் அச்சிறுவனோ, "இல்லை, இல்லை, இல்லவே இல்லை," என்று மறுத்துக் கொண்டிருந்தான். அச்சமயத்தில் நான் அங்கு வர, என்னை அச்சிறுவனிடம் காட்டிய பக்தர், "இதோ இவரே கடவுள்," என்று கூறினார். துளியும் யோசிக்காத அச்சிறுவன், "இல்லை, இவர் கடவுளல்ல, கடவுளாக இருக்க முடியாது. கடவுளுக்கு எதற்குக் கண்ணாடி?" என்று எளிய எதார்த்தமான விதத்தில், எனது கண்ணாடியைக் காட்டி மறுப்புத் தெரிவித்தான். ஆச்சரியமடைந்த அனைத்து பக்தர்களும், சிறுவனின் புத்திக் கூர்மையை மிகவும் பாராட்டினர்; அதே சமயத்தில் இந்த அளவு புத்திகூட இல்லாத சில பெரியவர்கள், கண் தெரியாத, காது கேட்காத, கால்களால் நடக்க இயலாமல் சக்கர நாற்காலியில் செல்லக்கூடிய, என எத்தனையோ குறைகளுக்கு உட்பட்டிருக்கும் சாதாரண மனிதர்களை கடவுளாக ஏற்பது வேதனைக்குரியது என்றும் தெரிவித்தனர்.

கடவுள் என்பவர் ஒருவரே, ஆனால் தங்களையே கடவுள் என்று கூறுவோர், ஒரே சமயத்தில் பலர் இருக்கிறார்களே! இந்தியாவில் மட்டும் குறைந்தது 50பேர் தங்களைத் தாங்களே கடவுள் என்று கூறி அலைவதைக் காண்கிறோம். இதை வைத்தே இவர்களில் யாருமே கடவுள் அல்ல என்பதை எளிதில் உணரலாம்.

கிருஷ்ணர் இப்பூவுலகில் இருந்தபோது, பௌண்டரகன் என்பவன் தன்னையே கடவுள் என்று போலித்தனமாக கூறியதால், கிருஷ்ணர் அவனைக் கொன்றார்; ஆனால் இன்று இருக்கும் பல்வேறு கடவுள்கள் ஒருவரையொருவர் சந்திப்பதுகூட இல்லை. அறியாத அப்பாவி மக்களோ, உடலின் பிரச்சனைகளைப் போக்க இவர்களை அணுகுகின்றனர், உடலுக்கு அப்பாற்பட்ட ஆன்மாவைப் பற்றிய ஆர்வம் இம்மக்களுக்கும் இல்லை, இந்த போலிக் கடவுள்களுக்கும் இல்லை; பல்வேறு நோய்களால் சில சமயங்களில் இந்த போலிக் கடவுள்கள் அவதிப்பட, அறியாமையிலுள்ள மக்கள் அக்கடவுளுக்காக வேறு கடவுளிடம் (எந்தக் கடவுளிடம்?) வழிபடுகின்றனர்—என்னே வினோதம்!

## கடவுளின் தன்மைகள்

கடவுள் என்பவர் சர்வ சக்தி பொருந்தியவராக, எல்லாவற்றையும் படைத்தவராக, எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவராக, எல்லாவற்றையும் பராமரிப்பவராக, பூரண சுதந்திரம் உடையவராக இருக்க வேண்டும்.

**சர்வ சக்தி பொருந்தியவர்** என்றால் அவரால் இயலாதது என்று எதுவும் இருக்கக் கூடாது, இருக்க முடியாது. அவர் ஏதேனும் செயலைச் செய்ய விரும்பினால், எந்தத் தடங்கலுமின்றி செய்யக்கூடியவராக இருக்க வேண்டும். உதாரணமாக, அனைத்து புண்ணிய நதிகளிலும் நீராட விரும்பிய கிருஷ்ணர், தான் இருந்த இடத்திலேயே அனைத்து புண்ணிய நதிகளையும் வரவழைத்து அங்கேயே நீராடினார் (அவ்வாறு தோன்றியதே கோவர்த்தன மலையின் அடிவாரத்தில் உள்ள சியாம குண்டம் எனப்படும் தீர்த்தம்). புண்ணிய நதிகளிலிருந்து குழாய் மூலமாக தண்ணீர் எடுத்துவர வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இல்லை, அதற்காக பல வருடங்கள் யோசித்து திட்டம் தீட்ட வேண்டிய அவசியமும் இல்லை.

**எல்லாவற்றையும் படைத்தவர்** என்றால் இவ்வுலகத்தில் உள்ள அனைத்தும் அவரால் படைக்கப்பட்டதாக, அவருக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும். அவர் இவ்வுலகில் தோன்றும் போது, தங்கம், வெள்ளி, விலைமதிப்பற்ற கற்கள் போன்றவற்றை சாதாரண மனிதனால் கற்பனை செய்ய இயலாத அளவில் படைக்கக்கூடியவராக இருக்க வேண்டும். வேறுவிதமாகக் கூறினால், அவர் தங்கத்தை வரவழைக்க நினைத்தால் மலை போன்று குவிக்கும் சக்தி பெற்றவராக இருக்க வேண்டும், வெறும் மோதிரமோ சங்கிலியோ அவரை கடவுள் என்று நிரூபிப்பதற்குப் போதுமானவையல்ல. உதாரணமாக, கிருஷ்ணர் இவ்வுலகில் தனது லீலைகளை அரங்கேற்றியபோது, தனது இராணிகள் ஒவ்வொருவருக்காகவும் விலைமதிக்க முடியாத தங்கம், வைரம், தந்தம் போன்ற எண்ணற்ற பொருள்களால் அடங்கிய பல்வேறு மாட மாளிகைகளைப் படைத்தார், இந்திரனைக் காட்டிலும் அதிக வசதிகளை குசேலருக்காக படைத்தார். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான கடவுளை, அவர் படைத்த மனிதர்களில் ஒருவருடன் சமப்படுத்துவது நம் அறியாமையை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று காட்டுவதாகும்.

**எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவர்** என்றால், இவ்வுலகிலுள்ள அனைத்தும் அவரது கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். இயற்கை அவரது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், அவர் இயற்கையின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடாது. உதாரணமாக, கிருஷ்ணர் வெறும் ஏழு வயது சிறுவனாக இருந்தபோது, பல மைல் சுற்றளவுடைய கோவர்தன மலையைத் தனது இடது கை சுண்டு விரலால் மிகவும் எளிதாக எந்த சிரமமும் இன்றி ஏழு நாள்களுக்கு உயர்த்திப் பிடித்தார். குருக்ஷேத்திர போர்க்களத்தில் சூரியனையே மறைத்தார். ஆனால் இன்றைய மனிதக் கடவுள்கள் மழைக்காக யாகம் நடத்துவதும், சுனாமி எழும்போது அதைத் தடுக்க இயலாமல் வெறுமனே அனுதாபம் தெரிவிப்பதும் அவர்களது உண்மை நிலையை எடுத்துரைக்கின்றது.

**எல்லாவற்றையும் பராமரிப்பவர்** என்றால், இவ்வுலகிலுள்ள எல்லா ஜீவன்களையும் அவரே பாதுகாத்து, பராமரித்து வருகிறார் என்று பொருள். உதாரணமாக, கிருஷ்ணர் தனது லீலைகளை அரங்கேற்றியபோது, அவர் எல்லா மக்களையும் பாதுகாத்து வந்தார்; அவரது ஆட்சியில் யாரும் நோய்வாய்ப்படவில்லை, யாரும் அகால மரணம் எய்தவில்லை. ஆனால் இன்றைய மனிதக் கடவுள்களோ நோய் வராமல் தடுப்பதற்குப் பதிலாக நோயை குணப்படுத்த மருத்துவமனைகளை திறக்கின்றனர், அங்குள்ள பலரும் நோய் குணமாகாமல் மடிகின்றனர்; தன்னையும் தனது இயக்கத்தையும் பராமரிப்பதற்குக்கூட இவர்கள் மற்றவர்களிடமிருந்து பணம் வசூலிக்கின்றனர்.

**பூரண சுதந்திரமுடையவர்** என்றால், நினைத்ததை செய்யும் சக்தி பெற்றவராக, யாருக்கும் எதற்கும் கட்டுப்படாதவராக இருக்க வேண்டும். உதாரணமாக, கிருஷ்ணரை சிறைபிடிக்க துரியோதனன் விரும்பியபோது, அவர் தன்னைப் பல்வேறு ரூபங்களாக வியாபித்து, ''என்னை உன்னால் பிடிக்க முடியாது,''



சிறுவனாக இருந்தபோதே 1000 தலைகள் கொண்ட காளியனின் மீது நடனமாடிய முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர்

# கடவுள் சாதாரண மனிதனைப் போல பிறந்து இறப்பதில்லை, பிறந்து இறக்கும் சாதாரண மனிதன் என்றும் கடவுளாவதில்லை.

என்று தெரிவித்தார். ஆனால் இன்றைய மனிதக் கடவுள்கள் அவ்வப்போது சிறைக்குச் செல்வது வழக்கமாக உள்ளது; அவர்களால் இயற்கையின் அழைப்பைக்கூட கட்டுப்படுத்த முடியாது, பூரண சுதந்திரத்தைப் பற்றி என்ன சொல்வது?

மேலும், கடவுள் என்பவர், அழகு, அறிவு, செல்வம், பலம், புகழ், துறவு ஆகிய குணங்களை பூரணமாகப் பெற்றிருக்க வேண்டும். பூரணமாக என்றால், இக்குணங்களில் அவரை விடச் சிறந்தவர் யாரும் இருக்க முடியாது, இருக்கக் கூடாது. கிருஷ்ணர் கோடானகோடி மன்மதர்களை மயக்கும் அழகுடையவராக இருந்தார், அவர் என்றும் வயோதிகத்தை அடைந்தது கிடையாது, தனது அழகை இழந்தது கிடையாது. கிருஷ்ணர் எல்லாவற்றையும் அறிந்தவராக இருந்தார், கோடிக் கணக்கான வருடங்களுக்கு முன்னால் அவதரித்தபோது தான் செய்த செயல்களைக்கூட அவர் அறிந்திருந்தார், 64 கலைகளை 64 நாள்களில் கற்றார், பறவைகள், மிருகங்கள் என எல்லோரின் மொழியையும் அறிந்திருந்தார்; இன்றைய கடவுள்கள் தாய்மொழியைக்கூட தெளிவாக பேசத் தெரியாதவர்கள். கிருஷ்ணரின் செல்வம் அளவிட முடியாதது, அவர் யாரிடமும் என்றும் பணம் வசூலித்ததில்லை. அவரது வலிமையை மதிப்பிட முடியாது, சிறு வயதிலிருந்தே அவர் பல்வேறு அசுரர்களைக் கொன்றார்; ஆனால் இன்றைய கடவுள்களுக்குப் பாதுகாப்பு வசதிகள் அவசியமாக உள்ளன. அவரது புகழ் இப்பூமியில் மட்டுமின்றி மூவுலகமும் பரவிய ஒன்று, மேலும், அவரைப் போன்ற துறவு மனப்பான்மை கொண்டோர் வேறு எவரும் இல்லை.

## இறுதியாகச் சில துளிகள்

இவற்றிலிருந்து நாம் அறிவது என்னவெனில், கடவுள் எனப்படுபவர் சாதாரண மனிதனைப் போன்று இருக்கக் கூடாது, இருக்க முடியாது. மனிதனாக இருப்பவர் (இருந்தவர்) என்றாவது ஒருநாள் கடவுளாக மாறலாம் என்பதும் சாத்தியமல்ல. சாதாரண மனிதன் மட்டுமல்ல, அசாதாரணமான மனிதன்கூட என்றுமே கடவுளாக முடியாது. கடவுள் என்றும் கடவுளே; அவர் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அல்ல. கடவுள் சாதாரண மனிதனைப் போல பிறந்து இறப்பதில்லை, பிறந்து இறக்கும் சாதாரண மனிதன் என்றும் கடவுளாவதில்லை.

எனவே, தங்களையே கடவுளாகக் கூறுபவர்கள், மலையைத் தூக்கட்டும், விஸ்வரூபத்தைக் காட்டட்டும், சூரியனை மறைக்கட்டும், ஆயிரம் தலை கொண்ட பாம்பின் மீது நடனமாடட்டும், ஆயிரக்கணக்கான உருவில் தன்னை விஸ்தரிக்கட்டும், உலகில் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் செய்யட்டும்—அதன்பின்னர் வேண்டுமானால், அவர் கடவுளா என்பதை யோசித்துப் பார்க்கலாம். அதுவரை அத்தகு யோசனைக்குக்கூட இடம் கிடையாது. மந்த புத்தியுடைய அடிமட்ட முட்டாள்கள் மட்டுமே ஏமாற்றுக்காரர்களைக் கடவுளாக ஏற்று வழிபடுவர், அறிவுடையவர்களோ நிச்சயம் இதில் ஈடுபட மாட்டார்கள். மனிதக் கடவுள்களில் பெரும்பாலானோர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சமூகச் சேவைகளில் ஈடுபடுகின்றனர், அத்தகு சேவைகளுக்காக பலரிடமிருந்து பாராட்டும் பெறுகின்றனர்; ஆனால் அவர்கள் செய்யும் புண்ணியச் செயல்களைக் காட்டிலும் தங்களையே கடவுள் என்று கூறி மக்களை ஏமாற்றுவதால் வரும் பாவங்கள் கொடியவை என்பதால், அறிவுடைய மக்கள் இவர்களின் மீது துளியளவும் மதிப்பு வைப்பதில்லை.

### கடவுளை அறிய சில உடனடிக் குறிப்புகள்

* சாஸ்திரங்களில் இவரைப் பற்றிய குறிப்புகள் இருக்க வேண்டும்.
* கடவுளுக்கென்று இருக்கும் சில அங்க அடையாளங்கள், உடலில் இருக்க வேண்டும்.
* அழகு, அறிவு, செல்வம், வலிமை, புகழ், துறவு ஆகிய ஆறு ஐஸ்வர்யங்களையும் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும்; இந்த ஐஸ்வர்யங்களில் அவரை மிஞ்சுவோர் யாரும் இருக்கக் கூடாது.
* நினைத்ததை சாதிக்கும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும், அதற்காக மற்றவரை நாட வேண்டிய தேவையில்லாதவராக இருக்க வேண்டும்.
* மனிதர்களால் நினைத்துப் பார்க்க முடியாத அசாதாரணமான செயல்களைச் செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.
* எல்லாவற்றையும் படைத்து, கட்டுப்படுத்தி, பராமரிப்பவராக இருக்க வேண்டும்.

# பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மறைந்த விதம்

வழங்கியவர்: திருமதி. தாரிணி ராதா தேவி தாஸி

ஸ்ரீமத் பாகவதத்திலும் இதர புராணங்களிலும் பரம புருஷ பகவானின் பல்வேறு அவதாரங்களைப் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் எங்கு பிறந்தார் (பிறப்பார்), அவருடைய பெற்றோர் யார், அவர் நிகழ்த்திய அசாத்தியமான செயல்கள் யாவை போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய மறைவு பற்றி மிகக் குறைந்த தகவல்களே கொடுக்கப்பட்டுள்ளன. பகவான் இராமரும் இலக்ஷ்மணரும் சராயு நதியில் இறங்கி இவ்வுலக மக்களின் பார்வையிலிருந்து மறைந்ததாக இராமாயணம் விளக்குகின்றது. பகவான் சைதன்யரோ பூரியின் கோபிநாதர் கோவிலுள்ள கிருஷ்ண விக்ரஹத்தினுள் மறைந்ததாகக் கூறப்படுகிறது.

பகவான் இவ்வுலகிற்கு வருகையில், பல்வேறு லோகங்களைச் சார்ந்த தேவர்களும் இங்கு வந்து அவரது திருவிளையாடல்களில் ஈடுபட்டு அவரது நேரடி உறவினை அனுபவிக்கின்றனர். பகவான் கிருஷ்ணர் இவ்வுலகினை விட்டுச் செல்ல முடிவெடுத்தவுடன், முதலில் தன் குடும்ப உறுப்பினர்களான யாதவர்கள் அனைவரையும் அவர்களுடைய உயர் லோகங்களுக்குச் செல்ல வழிசெய்தார். பகவான் கிருஷ்ணரின் மறைவினை ஸ்ரீமத் பாகவதம் பின்வருமாறு விளக்குகின்றது.

உத்தவர் பத்ரிகாஷ்ரமத்திற்குச் சென்றபின், தனது லீலைகளை முடித்துக் கொள்ள விரும்பிய கிருஷ்ணர், யாதவர்களை துவாரகையிலிருந்து பிரபாஸ க்ஷேத்திரத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களைப் பல்வேறு சடங்குகளில் ஈடுபடுத்தினார். தனக்கு முன்பாக தனது உறவினர்கள் இவ்வுலகிலிருந்து செல்ல வேண்டும் என்று விரும்பிய கிருஷ்ணர், அவர்களை தனது மாயச் சக்தியினால் கவர, அவர்கள் மதுவருந்தி போதையில் மூழ்கினர். அவர்களின் அறிவு மயக்கப்பட்டதால் தங்களுக்குள் சண்டையிட்டு, கிருஷ்ண பலராமரைத் தவிர மற்ற அனைவரும் மடிந்தனர்.

அதன் பின்னர் கடற்கரைக்குச் சென்ற பலதேவர், அங்கிருந்தபடி இவ்வுலகிலிருந்து மறைந்தார். பலராமர் மறைந்ததைக் கண்ட கிருஷ்ணர் ஓர் அரச மரத்தின் அடியில் அமைதியாக அமர்ந்தார். பின்னர், பிரகாசமான தனது நான்கு கரங்களைக் கொண்ட ரூபத்தினை வெளிப்படுத்தினார். அதனால் ஏற்பட்ட பிரகாசம் சுற்றியிருந்த இருளை நீக்கியது. கருநீல மேகம் போன்ற மேனியுடனும், உருக்கிய பொன்னிற பிரகாசத்துடனும் திகழ்ந்த அவரது திருமேனி ஸ்ரீவத்ஸக் குறியினைத் தாங்கியிருந்தது. அழகிய புன்னகை அவரது முகத்தில் அரும்பியிருக்க, சுருளான கருநீல முடி அவரது தலையை அலங்கரித்தது. அவரின் தாமரைக் கண்கள் வசீகரமாக இருந்தன, மகர குண்டலம் மின்னியது, பட்டுத் துணிகளை உடுத்தியிருந்தார். அலங்கார ஒட்டியாணம், புனித நூல், வளையல்கள், இதர கையாபரணங்கள், தலையில் கிரீடம், கௌஸ்துப மணி, கழுத்தணி, என பல உயர்ந்த ஆபரணங்களை அணிந்திருந்தார். அவரது உடலை மலர் மாலைகளும் ஆயுதங்களும் அலங்கரித்தன. அவர் தனது இடதுகாலின் அடிப்பாதங்கள் தெரியும்படி, இடது காலை வலது தொடையின் மீது வைத்தபடி அமர்ந்திருந்தார்.



ஜரா தன் தவறை உணர்ந்து தன்னை மன்னிக்கும்படி பகவானின் தாமரை பாதங்களில் தனது தலைபடும்படி சரணடைதல்

அப்பொழுது ஜரா என்னும் வேடன், பகவானின் அடிப்பாதத்தினை மான் என்று நினைத்து அம்பு தொடுத்தான். நான்கு கரங்களுடன் இருந்த கிருஷ்ணரைக் கண்டவுடன், வேடன் தனது தவறை எண்ணி நடுங்கினான். அசுரர்களின் எதிரியான இறைவனின் பாதங்களில் தனது தலைபடும்படி விழுந்து வணங்கினான். தன் தவறினை உடனடியாக உணர்ந்த வேடன், தன்னை மன்னிக்கும்படி சரணடைந்து வேண்டினான். "எனதன்புள்ள ஜரா, பயப்படாதே, எழுந்திரு. தற்போது நடந்த செயல் எனது விருப்பத்தின்படியே நடந்தது. கவலைப்படாதே, உன்னை நான் ஆன்மீக உலகத்திற்கு அனுப்பி வைக்கிறேன்," என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எந்தவொரு சலனமும் இன்றி பதிலளித்தார். பகவானின் கட்டளையை ஏற்ற ஜரா, அவரை மூன்றுமுறை வலம் வந்து வணங்கினான். அப்போது அங்கு தோன்றிய விமானத்தில் ஏறிய வேடன், அங்கிருந்து ஆன்மீக உலகத்திற்குப் புறப்பட்டான்.


அப்போது தனது எஜமானரைத் தேடிய தாருகன் அங்கு வந்தான். கிருஷ்ணர் இருந்த இடத்தின் அருகில் வந்தவுடன், துளசியின் மணம் வந்த திசையினை நோக்கிச் சென்றான். சுற்றிலும் தன் ஆயுதங்கள் இருக்க, அரச மரத்தினடியில் இருந்த கிருஷ்ணரைக் கண்டவுடன், அவர் மேல் பொங்கிய அன்பினை தாருகனால் கட்டுப்படுத்த இயலவில்லை. தேரிலிருந்து இறங்கி பகவானை நோக்கி ஆனந்தக் கண்ணீருடன் விரைந்து வந்து அவரது பாதங்களில் பணிந்தான். பகவானின் சாரதியான தாருகன் அவரைப் புகழ்ந்து கொண்டிருக்கையில், பகவானின் தேர் அங்கிருந்து எழுந்து மேலே சென்றதை தாருகன் தன் இரு கண்களால் கண்டான். கருடனின் கொடியைத் தாங்கிய அத்தேருடன் குதிரைகளும் சென்றன. விஷ்ணுவின் திவ்ய அஸ்திரங்களும் மேலெழுந்து, தேரினைப் பின்தொடர்ந்தன. விண்வெளியிலிருந்து வாத்தியங்கள் முழங்க மலர் மாரி தூவப்பட்டபோது, கிருஷ்ணரும் அங்கிருந்து புறப்பட்டார்.

**குறிப்பு:** இறைவனின் தோற்றம் எவ்வாறு ஜட இயற்கையின் சட்டங்களுக்கு அப்பாற்பட்டதோ, அதுபோன்று அவரது மறைவும் ஆச்சரியமானது என்பதை நாம் காணலாம். வேடனின் அம்பினால் கிருஷ்ணர் மரணமடைந்தார் என்று நினைக்கும் குறைமதியாளர்கள், இறைவன் தனது சொந்த விருப்பத்தினால் இவ்வுலகை விட்டுச் சென்றார் என்பதை இந்நிகழ்ச்சியிலிருந்து அறியலாம்.

திருமதி. தாரிணி ராதா தேவி தாஸி, தனது கணவர்
திரு. சுமித்ர கிருஷ்ண தாஸ் அவர்களுடன் சென்னை
இஸ்கான் கோயிலில் தொண்டாற்றி வருகிறார்.

## அவதாரங்களை அடையாளம் காணுதல்

எல்லா சக்திகளும் பொருந்தியவராகத் திகழ்தல், முழுமுதற் கடவுள் ஸ்ரீ இராமருடைய குணங்களில் ஒன்றாகும். பௌதிக வாழ்வின் தடைகளையும் அசௌகரியங்களையும் தாண்டி அவரால் செயல்பட முடியும். இருப்பினும், தான் முழுமுதற் கடவுள் என்பதையும், விளம்பரப்படுத்தப்பட்ட கடவுளோ ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கடவுளோ அல்ல என்பதையும் நிரூபிப்பதற்காக, அவர் கடலின் மீது ஓர் அருமையான பாலத்தினைக் கட்டினார். எந்த அசாதாரண செயல்களையும் செய்யாத ஒரு செயற்கையான கடவுளைத் தேர்ந்தெடுப்பது என்பது தற்காலத்தில் வழக்கமாகி விட்டது; கடவுளின் சக்தியை அறிந்திராத முட்டாள் மனிதன், சிறு மாயாஜாலத்தினைக் கண்டு குழம்பி, செயற்கையான கடவுளைத் தேர்ந்தெடுக்கின்றான். ஆனால் பகவான் இராமரோ கற்களை மிதக்க வைத்து, நீரின் மீது பாலத்தைக் கட்டினார். இதுவே கடவுளின் அசாதாரணமான அற்புத சக்திக்கு சாட்சியாகும். எந்தவொரு சாதாரண மனிதனாலும் என்றுமே செய்ய இயலாத, அசாதாரணமான செயல்களை கடவுள் வெளிப்படுத்த வேண்டும்; அவ்வாறு வெளிப்படுத்தாத ஒருவனை ஏன் கடவுளாக ஏற்க வேண்டும்? பகவான் இராமர் இப்பாலத்தைக் கட்டியதால், நாம் அவரை புருஷோத்தமரான முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்கிறோம்; தனது ஏழே வயதில் கோவர்தன மலையைத் தூக்கியதால், நாம் கிருஷ்ணரை புருஷோத்தமரான முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்கிறோம். ஏதோ ஓர் அயோக்கியனைக் கடவுளாகவோ கடவுளின் அவதாரமாகவோ நாம் ஏற்றுக் கொள்ள முடியாது; ஏனெனில், கடவுள் தனது பல்வேறு செயல்களில், தனது விசேஷச் செயல்களை வெளிப்படுத்துகிறார். (தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், ஸ்ரீமத் பாகவதம் 9.10.15, பொருளுரை)



# ஜபம் செய்வதும் கவனம் சிதறுவதும்

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் விருந்தினர் ஒருவருக்குமிடையில் ஆகஸ்ட் 14, 1971ஆம் ஆண்டில் இலண்டன் நகரில் நடந்த உரையாடலின் ஒரு பகுதி

**ஸ்ரீல பிரபுபாதர்:** நாங்கள் கடவுளைப் பற்றி கற்றுத் தருகிறோம். அவர் இந்துவோ, கிருஸ்தவரோ, இஸ்லாமியரோ அல்ல. கடவுள் கடவுளே. அனைவரும் கடவுள் உணர்வுடன் இருக்க வேண்டும். இதுவே எங்கள் இயக்கம். நாங்கள் கடவுளிடம் அன்பு செலுத்தும்படி பிரச்சாரம் செய்து வருகிறோம். ஒருவர் எந்த மதத்தைப் பின்பற்றுகிறார் என்பது பொருட்டல்ல. அவருக்குக் கடவுளின் மீது அன்பு இருக்கிறதா என்பதை மட்டுமே நாங்கள் கவனிக்கின்றோம். கடவுளின் மீதான அன்பினை வளர்க்க உதவுவதே முதல் தரமான மதம் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது. நீங்கள் எந்த மதத்தைப் பின்பற்றுகின்றீர் என்பது முக்கியமல்ல, ஆனால் அதன் மூலம் கடவுள்மீதான அன்பை வளர்த்துள்ளீர்களா என்பதை பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

**விருந்தினர்:** அப்படியெனில், நீங்கள் மதமாற்றம் செய்வ தில்லை...

**பிரபுபாதர்:** நாங்கள் மதமாற்றம் செய்வதில்லை, கடவுளிடம் அன்பு செலுத்துவதற்குக் கற்றுக் கொடுக்கின்றோம்.

**விருந்தினர்:** நாங்களும் அதைத்தான் செய்து வருகிறோம்.

**பிரபுபாதர்:** ஆனால் அதைச் சோதித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் கடவுளின் மீது அன்பு செலுத்துகிறார்களா, நாயின் மீது அன்பு செலுத்துகிறார்களா என்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டும். ஒருவன் நாயின் மீது அன்பு செலுத்துபவனாக மாறிவிட்டான் என்றால், அவனது மதம் உபயோகமற்றது.

**விருந்தினர்:** இதை எப்படி அறிந்து கொள்வது?

**பிரபுபாதர்:** ஒருவர் கடவுளின் மீது அன்பு செலுத்துகிறாரா நாயின் மீது அன்பு செலுத்துகிறாரா என்பதை நீங்களே காணலாம். இதுவே சோதனை. கடவுளைப் பிரிந்து வாழும் ஒரு கண நேரத்தைப் பல யுகங்களாக உணர்வதாக சைதன்ய மஹாபிரபு கூறுகிறார். கோவிந்தன் இல்லாமல் அனைத்தையும் வெற்றிடமாக அவர் கருதுகிறார். கடவுளின் மீதான அன்பிற்கு இதுவே மிகச்சிறந்த உதாரணம்.

மற்றொரு சோதனை என்னவெனில், ஒருவன் கடவுளின் மீது அன்பு செலுத்தத் தொடங்கிவிட்டால், அவன் இயற்கையாக பௌதிக இன்பத்திலிருந்து விலகியிருப்பான். கடவுளின் மீதான அன்பும் ஜடவுலகத்தின் மீதான அன்பும் ஒன்றாகச் செல்ல இயலாது. இயேசு கிருஸ்துவை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் பொருளாதார முன்னேற்றத்தையோ தொழில் முன்னேற்றத்தையோ அறிவுறுத்தவில்லை. அவர் எல்லாவற்றையும் கடவுளுக்காக அர்ப்பணித்தார், இதுவே கடவுளை நேசிப்பவருக்கான சோதனை. எனவே, நீங்கள் எந்தப் பாதையைப் பின்பற்றினாலும் பிரச்சனை இல்லை என்றும், கடவுளின் மீது அன்பை வளர்க்க வேண்டும் என்றும் நாங்கள் போதிக்கின்றோம்.

ஒருவன் கணிதத்தில் முதிர்ச்சி பெற விரும்பினால், அவன் எந்த பல்கலைக்கழகத்திலிருந்து தேர்ச்சி பெறுகிறான் என்பது பொருட்டல்ல. அதுபோல, கடவுளின் மீதான அன்பை வளர்ப்பதற்கு மதம் ஒரு பொருட்டல்ல. எனவே, கடவுளின் மீது அன்பு செலுத்தக் கற்றுக் கொடுப்பதே எங்களின் கொள்கை.



**ஒருவர் கடவுளின் மீது அன்பு செலுத்துகிறாரா நாயின் மீது அன்பு செலுத்துகிறாரா என்பதை நீங்களே காணலாம். இதுவே உண்மையான மதத்திற்கான சோதனை.**

இதனால் கடவுளை உண்மையாகத் தேடுபவர்கள் எங்களிடம் வருகிறார்கள். அமெரிக்கா, ரஷ்யா, ஆப்பிரிக்கா, கனடா என எந்தப் பகுதியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, இதில் கலந்துகொள்ளலாம். வழிமுறையும் மிக எளிதானது. கடவுளின் திருநாமத்தை உச்சரிப்பதே வழிமுறை. நாங்கள் கிருஷ்ணரின் திருநாமத்தை உச்சரிக்கின்றோம், ஆனால் இதைத்தான் உச்சரிக்க வேண்டும் என்று நாங்கள் கூறுவதில்லை. உங்களுக்கு கடவுளின் பெயர் தெரிந்திருந்தால், நீங்கள் அப்பெயரை உச்சரிக்கலாம்.

**விருந்தினர்:** நாங்கள் இயேசு கிருஸ்து என்று சொல்கிறோம்.

**பிரபுபாதர்:** ஆனால் இயேசு கிருஸ்து ஒருபோதும் தன்னைக் கடவுள் என்று கூறவில்லை. அவர் தன்னை கடவுளின் மைந்தன் என்றுதான் கூறினார். நீங்கள் கடவுளின் எந்தவொரு பெயரை உச்சரித்தாலும் சரி, நாங்கள் அதற்கு ஆட்சேபணை தெரிவிப்பதில்லை. கடவுளின் திருநாமத்தை உச்சரியுங்கள் என்று நாங்கள் பிரச்சாரம் செய்கிறோம். கடவுளின் திருநாமம் என்னவென்று தங்களுக்குத் தெரியாதபட்சத்தில், நாங்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டு கிருஷ்ணரின் திருநாமத்தை உச்சரியுங்கள்.

நாம்நாம் அகாரி பஹுதா நிஜ-ஸர்வ-ஷக்திஸ்
தத்ரார்பிதா நியமித: ஸ்மரணே ந கால:
ஏதாத்ருஷீதவ க்ருபா பகவன் மமாபி
துர்தைவம் ஈத்ருஷம் இஹாஜனி நானுராக:

(ஸ்ரீ சிக்ஷாஷ்டகம் 2)

கடவுளுக்கு எண்ணிலடங்காத திருநாமங்கள் இருப்பதாகவும் அவ்வெல்லா நாமங்களும் சர்வசக்தி படைத்தவை என்றும் சைதன்ய மஹாபிரபு கூறுகிறார். இறைவனின் திருநாமத்தைச் சொல்வதற்குக் கடுமையான நிபந்தனைகள் ஏதும் இல்லை. எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும், எந்தச் சூழ்நிலையில் வேண்டுமானாலும் இதனை ஜபிக்கலாம். நான் உட்பட இங்கிருப்பவர்கள் அனைவரிடமும் ஜப மாலை உள்ளது. நாங்கள் ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று ஜபம் செய்கிறோம். இதில் என்ன நஷ்டம்? நேரமில்லை என்று சொல்ல முடியாது. நாம் தெருவில் நடந்துசெல்லும்போதுகூட ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று ஜபம் செய்யலாம். நான் இங்கு அமர்ந்து உங்களுடன் உரையாடிக் கொண்டுள்ளேன். உரையாடலை முடித்த பின்னர், ஹரே கிருஷ்ண ஜபம் செய்வேன். இதில் என்ன கஷ்டம்? ஆனால் இத்திருநாமங்களை உச்சரிக்கும்படி மக்களை அணுகினால், அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை; துரதிர்ஷ்டமான நிலை. நீங்கள் தேவாலயத்திற்கோ, கோயிலுக்கோ, ஸ்வர்கத்திற்கோ, நரகத்திற்கோ செல்ல வேண்டிய அவசியமில்லை, நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும், அந்த நிலையில் இருந்தபடியே இறைவனின் திருநாமத்தை உச்சரிக்கலாம். இது மிகவும் எளிமையானது. இதற்குக் கட்டணம் ஏதுமில்லை, எந்த இழப்புமில்லை. மாறாக, பெருமளவில் இலாபம் கிட்டும்; ஏன் இதை ஏற்றுக் கொள்ளக் கூடாது?

**விருந்தினர்:** நீங்கள் ஜபம் செய்யும் போது உங்களின் கவனம் ஜபத்தில் இருக்க வேண்டுமல்லவா? மற்ற செயல்களைச் செய்வதோ நினைப்பதோ எவ்வாறு சாத்தியம்?

**பிரபுபாதர்:** மற்ற செயல்கள் என்றால்?

**விருந்தினர்:** எண்ணற்ற செயல்கள் உங்கள் கவனத்தை திசைத் திருப்பலாமே.

**பிரபுபாதர்:** நாம் முதலில் நாமத்தை ஜபிக்கலாம். அதன் பின்னர், கவனத்தைப் பற்றி யோசிக்கலாம்.

**விருந்தினர்:** இரண்டு செயல்களை ஒரே நேரத்தில் செய்வது சாத்தியமில்லை அல்லவா!

**பிரபுபாதர்:** இல்லை! நான் ஜபம் செய்யும் போது திருநாமங்களை என் காதுகளால் கேட்கிறேன். இதுவே கவனம். கவனம் என்பது உடனடியாக தானாகவே வருகின்றது.

**விருந்தினர்:** ஆனால் ஜபம் செய்யும்போது மற்றவர்களுடன் பேசுவதோ புத்தகங்களைப் படிப்பதோ இயலாததாயிற்றே...

**பிரபுபாதர்:** படித்தல் என்பதற்கு இடமில்லை. நாம் வெறுமனே ஜபம் செய்யச் சொல்கிறோம். படித்தல் என்பதைப் பிறகு செய்யலாம். சிறிய குழந்தைகளுக்கு அகர வரிசையைச் சொல்லித் தருவதுபோல எங்களின் இயக்கத்தில் அனைவருக்கும் (ஆரம்ப நிலையிலிருந்து) பயிற்சி அளிக்கப்படுகின்றது. இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு என்று பள்ளியில் கற்றுத் தருகிறார்கள். ஒரு மாணவன், "இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு" என்று சொல்ல மற்றவர்கள் அதனைத் திருப்பிச் சொல்வர். அவ்வாறு தொடர்ந்து உச்சரிப்பதால், இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். அதுபோலவே, கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் சொல்வதால், கடவுளை உணர முடியும்.

**விருந்தினர்:** நீங்கள் உச்சரிப்பது உங்கள் இதயத்தினுள் செல்வதாக உணர்கிறீர்களா?

**பிரபுபாதர்:** ஆம். ஏன் இல்லை?

**விருந்தினர்:** அது இதயத்திற்குள் ஆழமாக செல்லுமா?

**பிரபுபாதர்:** ஆம். நாம் சொல்பவை அனைத்தும் இதயத்திற்குள் செல்லும். நான் உங்களை பெயர் சொல்லி அழைக்கும் போது, அஃது என் இதயத்தில் செல்லாதா? "நீ ஒரு முட்டாள், நீ ஓர் அயோக்கியன்" என்று சொல்லும்போது, அவை இதயத்தினுள் செல்கின்றதா, இல்லையா? முட்டாள், அயோக்கியன் போன்ற வார்த்தைகள் இதயத்தினுள் செல்லும்போது, இறைவனின் திருநாமங்கள் இதயத்தினுள் செல்லாதா? நான் உங்களைக் கடுமையான சொற்களால் திட்டும் போது, உங்களுக்கு கோபம் வருவது ஏன்? ஏனென்றால், நான் கூறிய வார்த்தைகள் உங்களின் காதுகளின் வழியாக இதயத்திற்குள் செல்கின்றன.

**"நீ ஒரு முட்டாள், நீ ஓர் அயோக்கியன்" என்று சொல்லும்போது, அவை இதயத்தினுள் செல்கின்றதா, இல்லையா? முட்டாள், அயோக்கியன் போன்ற வார்த்தைகள் இதயத்தினுள் செல்லும்போது, இறைவனின் திருநாமங்கள் இதயத்தினுள் செல்லாதா?**

**விருந்தினர்:** நானும் சில சமயங்களில் பிரார்த்தனை செய்வதுண்டு.

**பிரபுபாதர்:** சில சமயங்களில் செய்வது போதுமானதல்ல, நீங்கள் எப்போதும் ஜபித்தால், அஃது உங்களது இதயத்தில் நிலைத்து நிற்கும்.

**விருந்தினர்:** எப்போதும் செய்ய வேண்டுமா?

**பிரபுபாதர்:** ஆம். வேறு வழியில்லை, எப்போதும். ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று உச்சரியுங்கள். அப்போது அது இதயத்தில் நிலைத்து நிற்கும். உங்கள் இதயத்தில் மட்டுமல்ல, அனைவரின் இதயத்திலும் நிலைக்கும். சிலர் வேடிக்கையாக எங்களைப் பார்த்து, ஹரே கிருஷ்ண என்று சொல்வதுண்டு. சென்ற முறை நான் ஆப்பிரிக்காவிற்குச் சென்றபோது, ஏதென்ஸ் என்ற இடத்தில் சில நிமிடங்கள் நின்று கொண்டிருந்தேன். அப்போது அங்கிருந்த சில மக்கள், எங்களைப் பார்த்து, ஹரே கிருஷ்ண என்று சொன்னார்கள். எங்களைப் பார்த்ததும், எங்களுடைய உடையையும் திலகத்தையும் பார்த்ததும், ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரிக்கின்றனர், சில நேரங்களில் வேடிக்கையாகவும் சொல்லலாம். இருப்பினும் அவர்களும் ஹரே கிருஷ்ண ஜபத்தின் உயர்ந்த பலனை அடைகின்றனர். இதுவே ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தின் பலன். கேளிக்கையோ வேடிக்கையோ, அவர்கள் உயர்ந்த பலனை அடைகின்றனர்.

**ரேவதி நந்தன்:** நான் மான்செஸ்டரில் உள்ள பூங்காவில் கீர்த்தனம் செய்தபோது, அங்குள்ள சிறுவர்கள் என் பின்னால், "ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண" என்று கூவிக் கொண்டு ஓடி வந்தனர். நாள் முழுவதும் என்னுடனே இருந்தனர்.

**பிரபுபாதர்:** எல்லாவிடங்களிலும் இதைக் காணலாம். மும்பையில் நாம் செல்லும் இடங்களிலெல்லாம் *ஹரே கிருஷ்ண* என்று சொல்வர். சிலர் கைகளைத் தட்டி, வேடிக்கையாக *ஹரே கிருஷ்ண* என்று சொல்வர். எல்லா இடங்களிலும் கடவுளின் திருநாமத்தைக் கேட்க நாங்கள் விரும்புகிறோம். இஃது உயர்ந்த பலன்களைக் கொடுக்கவல்லது. நெருப்பை விளையாட்டாகத் தொட்டாலும் உண்மையாகத் தொட்டாலும், அது நிச்சயம் சுடும். எனவே, இந்த திருநாமத்தைப் பரப்பும்படி நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். கடவுள் உணர்வு இல்லாமல் மொத்த உலகமும் தவித்துக் கொண்டுள்ளது. இந்த எளிமையான வழிமுறையைக் கற்றுத் தரவேண்டியது அனைத்து மதத்தின் கடமையாகும்.

**விருந்தினர்:** ஜபம் செய்யும்போது நீங்கள் தெளிவு பெறுகிறீர்களா?

**பிரபுபாதர்:** ஆம். நிச்சயமாகத் தெளிவடைகிறோம். இறைவனுக்கும் அவரது திருநாமத்திற்கும் வேறுபாடு இல்லை.

**விருந்தினர்:** ஜபிக்கும் போது உங்களது மனநிலை எவ்வாறு உள்ளது? மனதை எவ்வாறு கட்டுப்படுத்துகிறீர்?

**பிரபுபாதர்:** என் மனதில் என்ன இருந்தாலும், ஜபம் செய்யும் போது அதைப் பற்றி நான் யோசிப்பது இல்லை.

**விருந்தினர்:** ஜபம் செய்யும்போது உங்கள் மனதை எங்கு நிலைநிறுத்துவீர்?

**பிரபுபாதர்:** என் மனம் கடவுளின் உணர்வில் மூழ்கியிருக்க வேண்டும். இதுவே ஜபத்தின் விளைவு. மனம் வேறு எங்கும் செல்வதற்கு இல்லை.

**விருந்தினர்:** ஆனால் அவ்வாறு மனதை மூழ்கச் செய்தல் மிகவும் கடினமானதாயிற்றே?

**பிரபுபாதர்:** இல்லை. இதில் எந்த கஷ்டமும் இல்லை. பாவச் செயல்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டுமே இது கடினம். மற்றவர்களுக்கு அல்ல. பாவச் செயல்களில் ஈடுபட்டிருப்பவர்களால் கவனம் செலுத்த முடியாது. இதனால் தான் எங்கள் மாணவர்களிடம், தகாத பாலுறவைக் கைவிட வேண்டும், மாமிசம் உண்பதைக் கைவிட வேண்டும், போதைப் பொருள்களை கைவிட வேண்டும், சூதாட்டத்தில் ஈடுபடக் கூடாது என்று கட்டுப்பாடுகளை விதித்துள்ளோம். இவை பாவச் செயல்கள். பாவச் செயல்களில் ஈடுபட்டிருக்கும்வரை கடவுளின் திருநாமத்தில் கவனம் செலுத்த முடியாது. இந்த பாவச் செயல்களை சுய விருப்பத்துடன் கைவிட வேண்டும். அப்போது கவனம் என்பது சாத்தியமாகும்.

(தமிழாக்கம்: ரமணி மோஹன தாஸ்)




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் ஐந்து அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **ஆறாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# தியான யோகம்

## ஐந்தாம் அத்தியாயத்தின் சுருக்கம்

பக்தியுடன் செயலாற்றுவதையும் ஞானத்தில் செயலின்மையையும் ஒரே நேரத்தில் கிருஷ்ணர் வலியுறுத்தியதால், குழம்பிய அர்ஜுனன், அவையிரண்டில் சிறந்தது எது என்று வினவினான். இரண்டுமே முக்திக்கு ஏற்றவை என்றும், பக்தியுடன் செயலாற்றுதல் சிறந்தது என்றும் கிருஷ்ணர் பதிலளித்தார். கர்ம யோகத்தையும் ஸாங்கிய யோகத்தையும் சமநிலையில் காண்பவன் உள்ளதை உள்ளபடி காண்பவன். நற்செயல்களில் ஈடுபடாதபுலன்கள்தீச்செயல்களில்ஈடுபடப் போவது உறுதி; எனவே, புலன்களைக் கொண்டு பக்தியில் ஈடுபடுபவன் பரம்பொருளை எளிதில் அடையலாம். பல்வேறு செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் அவன் பந்தப்படுவதில்லை. ஒரு செயல் செய்யப்படுவதற்கு ஜீவன் முதல் காரணமாகவும், ஜட இயற்கை இரண்டாம் காரணமாகவும், பரமாத்மா இறுதி காரணமாகவும் அறியப்படுகின்றது. பரமாத்மாவை உணர்ந்தவன், அனைத்து உயிர்களையும் சமமாகப் பார்க்கின்றான், ஆரம்பமும் முடிவும் கொண்ட புலனின்பத்தில் அவன் நாட்டம் கொள்வதில்லை. தன்னுள் இன்பமாக இருக்கும் அந்த பக்குவமான யோகி, எல்லா பாவத்திலிருந்தும் விடுபட்டு முக்தியடைகிறான். நிஷ்காம கர்ம யோகத்தினால் அடையப்படும் இப்பலன், அஷ்டாங்க யோகத்தினாலும் அடையப்படலாம். கிருஷ்ணரை முறையாக அறிபவன் அமைதியடைய முடியும்.

## ஐந்தாம் அத்தியாயத்திற்கும் ஆறாம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

நிஷ்காம கர்ம யோகத்தின் மூலம் எவ்வாறு முக்தியடைவது என்பதை ஐந்தாம் அத்தியாயத்தில் விளக்கிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், அதன் இறுதியில் (5.27-28) அதே முக்தியை எவ்வாறு அஷ்டாங்க யோகத்தின் மூலம் அடைவது என்று மிகவும் சுருக்கமாக உரைத்தார். இந்த ஆறாம் அத்தியாயத்தில் அஷ்டாங்க யோகத்தினை அவர் மேலும் விளக்கமாக எடுத்துரைக்கின்றார்.

## அஷ்டாங்க யோகத்தின் இரு நிலைகள்

யோகத்தைப் பயிற்சி செய்வோர் புலனின்ப ஆசைகளிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்பதே முக்கிய கருத்தாகும். யோகத்தின் ஆரம்ப நிலையில் இருப்போர் (யோகாருருக்ஷு என்னும் நிலையில் இருப்போர்) பற்றுதலின்றி தங்களது செயல்களைச் செய்வதால் முன்னேற்றம் பெற முடியும். ஆனால் யோகத்தில் முன்னேறியவனுக்கு (யோகாரூட நிலையில் உள்ளவனுக்கு),

செயல்களைத் துறத்தலே வழியாகக் கூறப்படுகிறது. அவ்வாறு உயர்நிலையில் இருப்பவன், பலன்நோக்குச் செயல்களிலோ, புலனுகர்ச்சியிலோ ஈடுபட மாட்டான். அவ்வாறு உயர்வு பெறுவதற்கு மனதின் உதவி அவசியம்; மனதைக் கொண்டு உயர்த்திக் கொள்ள வேண்டுமேயொழிய தாழ்த்திக் கொள்ளக் கூடாது. மனதை வென்றவனுக்கு மனமே சிறந்த நண்பனாகும்; ஆனால் அவ்வாறு செய்யத் தவறுபவனுக்கோ அதுவே மிகப்பெரிய விரோதியாகும். மனதை வென்ற யோகி பரமாத்மாவை அடைந்தவன்; இன்ப துன்பம், குளிர் வெப்பம், மான அவமானம்—அனைத்தும் இவனுக்கு சமமே. அவன் ஞானத்தினாலும் விஞ்ஞானத்தினாலும் பூரண திருப்தியடையும்போது, யோகி என்று அழைக்கப்படுகிறான். கூழாங்கற்களையும் தங்கத்தையும் அவன் சமமாகக் காண்கிறான், நலன் விரும்பிகள், பாசத்துடன் பழகுவோர், நடுநிலையாளர்கள், சமாதானம் செய்வோர், பொறாமையுடையோர், நண்பர்கள், எதிரிகள், சாதுக்கள், பாவிகள் என அனைவரையும் சமமான மனதுடன் நடத்துபவன் மிகவும் முன்னேறியவனாவான்.

## தியானம் செய்யும் வழிமுறை

யோகத்தின் அத்தகு உயர்ந்த நிலையை அடைவதற்கு உடல், மனம், மற்றும் ஆத்மாவினை எப்போதும் பரமனின் தொடர்பில் ஈடுபடுத்த வேண்டும்; தனிமையான இடத்தில் தனியே வசித்து, நிலத்தில் தர்ப்பைப் புல்லைப் பரப்பி, அதனை மான் தோலாலும் மென்மையான துணியினாலும் மறைக்க வேண்டும். இந்த ஆசனம் மிக உயரமாகவோ, தாழ்வாகவோ இல்லாமல் புனிதமான இடத்தில் அமைந்திருக்க வேண்டும். இதன் மேல் அமர்ந்து, மனதையும் புலன்களையும் செயல்களையும் கட்டுப்படுத்தி, யோகத்தைப் பயில வேண்டும். உடல், கழுத்து, மற்றும் தலையை நேராக வைத்து நாசி நுனியை ஸ்திரமாக நோக்க வேண்டும். இவ்வாறாக, கிளர்ச்சியற்ற, அடக்கப்பட்ட மனதோடு, பயமின்றி, பிரம்மசரிய விரதத்துடன், இதயத்தினுள் உள்ள கிருஷ்ணரின் மீது தியானம் செய்து, கிருஷ்ணரையே வாழ்வின் இறுதிக் குறிக்கோளாக கொள்ள வேண்டும்.


பரமாத்மாவின் மீது தியானம் செய்யும் யோகி

தியானம் என்பது ஏதோவொரு பொருளின் மீதோ நபரின் மீதோ மனதைஒருமுகப்படுத்துவது அல்ல; மாறாக, இதயத்தினுள் வசிக்கும் கிருஷ்ணரின் அம்சமான பரமாத்மாவின் மீது ஒருமுகப்படுத்துவதாகும். அவ்வாறு பயிற்சி செய்யும் யோகியே இறைவனின் திருநாட்டை அடைய முடியும்.

அதிகமாக அல்லது குறைவாக உண்பவனும் உறங்குபவனும் என்றுமே யோகியாக முடியாது. உண்ணுதல், உறங்குதல், உழைத்தல், கேளிக்கை ஆகிய பழக்கங்களை நெறிப்படுத்தியவன் யோகப் பயிற்சியின் மூலமாக எல்லாத் துன்பங்களையும் களைய முடியும்.

## யோகத்தின் பக்குவநிலை குறித்த விளக்கங்கள்

காற்று வீசாத இடத்திலுள்ள தீபம், அசையாமல் இருப்பதைப் போல, மனதை அடக்கிய யோகியும், தனது தியானத்தில் ஸ்திரமாக உள்ளான். ஸமாதி என்றழைக்கப்படும் பக்குவ நிலையில், மனமானது ஜடச் செயல்களிலிருந்து முழுமையாக விலக்கப்படுகிறது. தன்னில் இன்பத்தை அனுபவிக்கும் அவன், உண்மையிலிருந்து என்றும் விலகுவதில்லை, மாபெரும் துன்பங்களாலும் அசைக்கப்படுவதில்லை, உறுதியுடனும் நம்பிக்கையுடனும் பாதையிலிருந்து பிறழாமல் ஈடுபடுகிறான். இவ்வாறு படிப்படியாக ஸமாதியில் நிலைபெற்று, மனம் தன்னில் மட்டுமே நிலைப்படுத்தப்பட்டு வேறெதையும் சிந்திக்காமல் இருக்க வேண்டும். மனம் தனது சஞ்சலமான இயற்கையினால் அங்குமிங்கும் சென்றால், அதனை உடனடியாக மீண்டும் இழுத்து கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும்.

சுயக்கட்டுப்பாடுடைய இத்தகு யோகி, இறைவனின் திவ்யமான அன்புத் தொண்டில் பக்குவமான சுகத்தினை அனுபவிக்கின்றான். அவன் கிருஷ்ணரை (பரமாத்மாவை) எல்லா உயிர்களிலும், கிருஷ்ணரில் எல்லா உயிர்களையும் காண்கிறான். கிருஷ்ணரை எல்லா இடங்களிலும், எல்லாவற்றையும் கிருஷ்ணரிலும் காண்பவன் அவரை ஒருபோதும் இழப்பதில்லை. கிருஷ்ணரும் அவனை ஒருபோதும் இழப்பதில்லை. எல்லா உயிர்களுடைய சுக துக்கங்களை தன்னுடன் ஒப்பிட்டுக் காண்பவன் பரம யோகியாகக் கருதப்படுகிறான்.

## அமைதியற்ற மனதைக் கட்டுப்படுத்துதல்

கிருஷ்ணரிடமிருந்து அஷ்டாங்க யோக வழிமுறையைக் கேட்ட அர்ஜுனன், அவ்வழிமுறையின்படி

## ஆறாம் அத்தியாயத்தின் ஆறு பகுதிகள்

**ஐந்தாம் அத்தியாயத்துடனான தொடர்பு:** 5.26-27, தியான யோகத்தின் அறிமுகம்

**(1) அஷ்டாங்க யோகத்தின் இரு நிலைகள் (6.1-9)**

மனதையும் புலன்களையும் கட்டுப்படுத்த உதவுவது

ஆரம்ப நிலையில் செயலே வழிமுறை

முன்னேறிய நிலையில் செயல்களைத் துறப்பதே வழிமுறை

மனமே நண்பன், மனமே எதிரி

புலனுகர்ச்சிப் பொருள்களின் மீதான பற்றுதல்களிலிருந்து மனதை விலக்குவதே பலன்—கல்லையும் பொன்னையும் சமமாகப் பார்த்தல்

**(2) தியானம் செய்யும் வழிமுறை (6.10-17)**

தனிமையான இடத்தில் தனியே வசிக்க வேண்டும்

தர்ப்பைப் புல்லை மான் தோலாலும் மெல்லிய துணியாலும் மூடி அமர வேண்டும்

இருக்கை உயர்வாகவோ தாழ்வாகவோ இருக்கக் கூடாது

நாசி நுனியில் பார்வையை வைத்து, உணவையும் உறக்கத்தையும் கட்டுப்படுத்தி, பரமாத்மாவை தியானிக்க வேண்டும்

**(3) யோகத்தின் பக்குவநிலை குறித்த விளக்கங்கள் (6.17-32)**

காற்று வீசாத இடத்திலுள்ள தீபத்தைப் போன்ற நிலைப்புத் தன்மை வேண்டும்

உண்மையிலிருந்து என்றும் விலகாமலும் மாபெரும் துன்பங்களால்கூட அசைக்கப்படாமலும் இருக்க வேண்டும்

சுயக் கட்டுப்பாடுடைய யோகி கிருஷ்ணரை எங்கும் எதிலும் காண்கிறான்

**(4) அமைதியற்ற மனதைக் கட்டுப்படுத்துதல் (6.33-36)**

மனம் நிலையற்றது, அமைதியற்றது

மனதைக் கட்டுப்படுத்துதல் காற்றைக் கட்டுப்படுத்துவதைக் காட்டிலும் கடினம்

கிருஷ்ணர்: நிச்சயம் கடினமே, ஆனால் பயிற்சியினாலும் பற்றின்மையாலும் மனதைக் கட்டுப்படுத்த முடியும்.

**(5) வெற்றியடையாத யோகியின் நிலை (6.37-45)**

யோகி தனது முயற்சியில் வெற்றியடையாவிடில், அவனது நிலை என்ன?

குறைவான முன்னேற்றத்திற்குப் பின் வீழ்ச்சியுற்றோர், நல்லோர்களின் குடும்பத்திலோ செல்வந்தரின் குடும்பத்திலோ பிறக்கின்றனர்

நீண்ட கால யோகப் பயிற்சிக்குப் பின் வீழ்ச்சியுற்றோர், சிறந்த ஆன்மீகவாதிகளின் குடும்பத்தில் பிறக்கின்றனர்

**(6) மிகவுயர்ந்த யோகி (6.46-47)**

அனைத்து யோகிகளிலும் பக்தி யோகியே சிறந்தவன்

மனதைக் கட்டுப்படுத்துதல் தன்னால் இயலாத ஒன்று என்று தெரிவித்தான். நிலையற்றதும் அமைதியற்றதுமான மனதை நடைமுறைக்கு ஒத்துவராததும் தாங்க இயலாததுமான இந்த அஷ்டாங்க யோக முறையினால் கட்டுப்படுத்த இயலாது என்றும், சஞ்சலமும் சக்தியும் மிகுந்த மனதை அடக்குவதைவிட வீசும் காற்றை அடக்குவது எளிதானது என்றும் தெரிவித்தான்.

அமைதியற்ற மனதை அடக்குவது மிகவும் கடினமே என்பதில் சந்தேகமில்லை என்று கிருஷ்ணரும் ஒப்புக் கொண்டார். இருப்பினும் தகுந்த பயிற்சியினாலும் பற்றின்மையாலும் அது சாத்தியமாகும் என்று கருத்து தெரிவித்தார். அஃது என்ன பயிற்சி? புனித ஸ்தலத்தில் வசித்தல், பரமாத்மாவின் மீது மனதை ஒருமுகப்படுத்துதல், புலன்களையும் மனதையும் அடக்குதல், பிரம்மசரியத்தை முழுமையாகக் கடைபிடித்தல், தனிமையான இடத்திற்குச் சென்று மழை, வெயில், குளிர் என அனைத்திற்கும் மத்தியில் வாழ்தல் போன்ற கடுமையான சட்டதிட்டங்களை தற்காலத்தில் யாராலும் கடைப்பிடிக்க முடியாது. அர்ஜுனன் ஒரு சாதாரண நபர் அல்ல; தனிச்சிறப்பு வாய்ந்த அர்ஜுனனாலேயே அஷ்டாங்க யோகத்தைப் பின்பற்றி மனதைக் கட்டுப்படுத்த இயலாத பட்சத்தில், இன்றைய கலி காலத்தில் வாழும் நவநாகரிக மனிதர்கள் அஷ்டாங்க யோகத்தைப் பயிற்சி செய்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். எனவே, பக்தி யோகத்தின் ஒன்பது வழிமுறைகளைப் பயிற்சி செய்வதே, ஒருவன் மனதைப் படிப்படியாக கட்டுப்படுத்துவதற்கு உதவும் உண்மையான பயிற்சி முறையாகும். மனதைக் கட்டுப்படுத்தி “பக்தி” என்னும் சரியான வழியில் முயல்பவனுக்கு வெற்றி நிச்சயம்.

### வெற்றியடையாத யோகியின் நிலை

ஞான யோகம், தியான யோகம், பக்தி யோகம் என்னும் பாதைகளில் ஏதேனும் ஒரு பாதையை நம்பிக்கையுடன் பின்பற்றிய ஆன்மீகவாதி, பிறகு உலக எண்ணங்களினால் அதனை நிறுத்திவிட்டால், அவன் நிச்சயம் பக்குவமடைவதில்லை. அவ்வாறு பாதையிலிருந்து மயங்கிய மனிதன், ஆன்மீகத்திலும் வெற்றியடையாமல், பௌதிகத்திலும் வெற்றியடையாமல், சிதறிய மேகம் போன்று எங்கும் இடமின்றி அழிந்துவிடலாம் என்று நினைத்த அர்ஜுனன், அத்தகு வெற்றியடையாத ஆன்மீகியின் கதி

என்ன? என்ற தனது சந்தேகத்தினை கிருஷ்ணரின் முன்வைத்து அதனைத் தீர்க்குமாறு வேண்டினான்.

நற்செயல்களில் ஈடுபட்டவன் இவ்வுலகிலோ பரவுலகிலோ அழிவை அடைவதில்லை, நன்மையைச் செய்தவன் தீமையை அடைவதேயில்லை என்று கிருஷ்ணர் பதிலளித்தார். பௌதிக வாழ்வைத் துறந்து பரம புருஷ பகவானிடம் சரணடைபவனுக்கு நஷ்டமோ இழப்போ இல்லை. ஆன்மீகப் பாதையிலிருந்து விலகியவர்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம்: சிறிய முன்னேற்றத்திற்குப் பின் வீழ்ச்சியுற்றோர், நீண்ட கால யோகப் பயிற்சிக்குப் பின் வீழ்ச்சியுற்றோர். சிறிய முன்னேற்றத்திற்குப் பின் வீழ்ச்சியுற்ற யோகிகள், புண்ணிய ஆத்மாக்களின் லோகங்களில் பற்பல வருடங்கள் அனுபவித்து, அதன் பின், நல்லறம் மிக்க பிராமணர்களின் குடும்பத்தில் அல்லது செல்வந்தரின் குடும்பத்தில் பிறக்கின்றனர். அதன் மூலம் வாழ்வின் தேவைகளைப் பற்றி அதிகம் கவலைப்படாமல், தனது ஆன்மீகப் பணியில் அவன் எளிதில் கவனம் செலுத்த முடியும். இருப்பினும், இத்தகு குடும்பங்களில் பிறப்போர், தங்களது குலப் பெருமையினாலும் செல்வச் செழிப்பினாலும் மயங்கி, ஆன்மீகப் பயிற்சியை ஏற்றுக் கொள்ள மறுப்பதைக் காண்கிறோம்.

நீண்ட கால யோகப் பயிற்சிக்குப் பின்பு வீழ்ச்சியுற்ற ஆத்மாக்கள், அறிவிற் சிறந்த ஆன்மீகவாதிகளின் (ஆச்சாரியர்கள், கோஸ்வாமிகள் போன்ற உயர்ந்த பக்தர்களின்) குடும்பத்தில் பிறக்கின்றனர், இத்தகு பிறவி நிச்சயமாக மிகவும் அரிதானதாகும். அவ்வாறு பிறவியடைபவன், தனது முந்தைய பிறவியின் திவ்ய உணர்வினை மீண்டும் பெற்று, பூரண வெற்றியை அடைவதற்காக, அந்நிலையிலிருந்து மேலும் முன்னேற்றமடைய முயல் கின்றான். இவன் தனது பூர்வ ஜன்ம உணர்வின் காரணத்தினால், யோகத்தின் மீது இயற்கையாகவே பற்றுதல் கொள்கிறான். அவன் சாஸ்திரங்களின் சடங்குகளில் மயங்காமல், யோகத்தின் மிகவுயர்ந்த பக்குவ நிலையான பூரண கிருஷ்ண உணர்வில் ஆர்வம் காட்டுகின்றான். இதனால் தான், கிருஷ்ணரின் திருநாமத்தை உச்சரிப்பவன், எல்லாவித தவங்களையும் யாகங்களையும் ஏற்கனவே செய்தவ னாகவும், எல்லா புண்ணிய நதிகளிலும் நீராடியவனாகவும், எல்லா சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த வனாகவும் கருதப்படுகிறான்.

## மிகவுயர்ந்த யோகி

அனைத்து யோக முறைகளையும் இதுவரை விளக்கிய கிருஷ்ணர், பக்தி யோகத்தை விளக்கமாக (ஏழாம் அத்தியாயத்திலிருந்து) எடுத்துரைப்பதற்கு முன்பு, எல்லா யோகிகளையும் ஒப்பிடுகிறார். தவம் புரிபவன், ஞானி மற்றும் பலனை எதிர்பார்த்து செயல்படுபவனைக் காட்டிலும், யோகி சிறந்தவனாக இருப்பதால், யோகியாகும்படி அர்ஜுனன் அறிவுறுத்தப்படுகிறான். யோகியாக வேண்டும் என்றால், எத்தகைய யோகியாக வேண்டும் என்பதையும் கிருஷ்ணர் தெளிவுபடுத்துகிறார். எந்தவொரு யோகி, எப்போதும் கிருஷ்ணரில் நிலைத்து, தன்னுள் அவரை எண்ணி, அவருக்கு திவ்யமான அன்புத் தொண்டு புரிகின்றானோ, அந்த பக்தி யோகியே யோகத்தில் கிருஷ்ணருடன் மிகவும் நெருங்கியவனும் எல்லாரையும்விட உயர்ந்தவனும் ஆவான். எல்லா யோகிகளிலும் பக்தி யோகியே சிறந்தவன் என்பதை கிருஷ்ணர் இந்த அத்தியாயத்தின் இறுதியில் அறுதியிட்டு கூறுகிறார். பக்தி யோகியைவிட அஷ்டாங்க யோகி உயர்ந்தவன் என்று ஆதாரமின்றி உரைக்கும் பல போலி வாதங்களை சந்தித்தவர்கள், கிருஷ்ணரின் உறுதியான அபிப்பிராயத்தால் தெளிவடைவது நிச்சயம்.

---

வாசகர் கடிதம்

## நிகழ்கால நடப்புகளுக்கான வழிகாட்டுதல் தேவை

*ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் (பகவத் தரிசனம்)* என்னும் அரிய பொக்கிஷத்தை எங்களுக்கு அளிக்க பாடுபடும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி. *கிரிக்கெட் காய்ச்சல்* என்ற கட்டுரையைப் படித்து கிரிக்கெட் பார்ப்பதை முற்றிலுமாக நிறுத்திவிட்டேன். தக்க சமயத்தில் தடுப்பூசியுடன் வந்து எங்களை காத்தமைக்கு நன்றிகள் பல. அதே சமயம் அடுத்தடுத்த இதழ்களில், ஜப்பான் சுனாமி, தமிழக தேர்தல் சார்ந்த ஸ்ரீ கிருஷ்ணரின் விவாதங்களை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தேன். இந்த மாதிரியான பௌதிக பிரச்சனைகளுக்கு *கிருஷ்ண தரிசனத்தின்* வழிகாட்டுதல் தேவை. நிகழ்கால நடப்புகளைச் சார்ந்து ஒவ்வொரு இதழிலும் ஒரு கட்டுரை இடம் பெற வேண்டுகிறேன்.

சூ. செந்தில் கணேசா, திருச்சி

*பகவத் தரிசனம்* இதழ் குறித்த தங்களது ஆர்வத்தைக் கண்டு மிக்க மகிழ்ச்சி. நிகழ்கால நடப்புகள் சார்ந்த சாஸ்திர பார்வையை மக்களுக்கு வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அத்தகு பார்வைகளை தொடர்ந்து வழங்குவோம் என்று உறுதியளிக்கின்றோம்.

தமிழக தேர்தல்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எந்தவொரு தகவலையும் வெளியிட விரும்பவில்லை என்பதே உண்மை. அரசியல் சார்பற்ற, ஆன்மீகப் பத்திரிகையாக வலம்வர நாங்கள் விரும்புகிறோம். அரசு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு வேத சாஸ்திரங்களில் எத்தனையோ வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாக, *மதச்சார்பற்ற அரசு* என்னும் தலைப்பில் ஸ்ரீல பிரபுபாதரின் உரையாடல் ஒன்றை பிரசுரித்திருந்தோம். ஜப்பானில் நிகழ்ந்த சுனாமி ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி என்பதால், இதுபோன்ற பிரச்சனைகளுக்கான ஒரு முக்கிய காரணம், பசுக்கள் வதை செய்யப்படுவதே என்னும் சிறிய தகவலை மட்டும் வழங்கியிருந்தோம். தனிக்கட்டுரை அமைக்கவில்லை என்பது உண்மையே; இனிவரும் காலங்களில் நீங்கள் அவற்றை எதிர்பார்க்கலாம்.

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### அத்தியாயம் இரண்டு, ஸ்லோகம் 8

தர்ம: ஸ்வனுஷ்டித: பும்ஸாம் விஷ்வக்ஸேன-கதாஸு ய:
நோத்பாதயேத் யதி ரதிம் ஷ்ரம ஏவ ஹி கேவலம்

### மொழிபெயர்ப்பு

மனிதர்கள் தங்களது சொந்த நிலைக்கு ஏற்றவாறு செய்யும் தொழில்கள், பரம புருஷ பகவானைப் பற்றிய செய்திகளின் மீதான பற்றுதலைத் தூண்டவில்லை என்றால், அவையனைத்தும் பயனற்ற உழைப்பேயாகும்.

### பொருளுரை

வாழ்வைப் பற்றி மனிதன் கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளுக்கு ஏற்ப, வெவ்வேறு தொழில்கள் உள்ளன. ஸ்தூலமான பௌதிக உடலுக்கு அப்பால் வேறெதையும் காண முடியாத பௌதிகவாதியைப் பொருத்தவரை, புலன்களுக்கு அப்பால் வேறெதுவும் கிடையாது. எனவே, அவனுடைய கடமைகள் குறுகிய சுயநலம், பரந்த சுயநலம் என்னும் எல்லைக்குள் நின்றுவிடுகின்றன. குறுகிய சுயநலம் என்பது, சொந்த உடலை மையமாகக் கொண்டுள்ளது—இதனைப் பொதுவாக தாழ்ந்த மிருகங்களிடையே காணலாம். பரந்த சுயநலம் என்பது, உடலை வசதியாக வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன், மனித சமூகத்தில், குடும்பம், சமூகம், குலம், தேசம், உலகம் போன்றவற்றை மையமாகக் கொண்டு காணப்படுகின்றது. இத்தகு பூரண பௌதிகவாதிகளுக்கு மேலே, மனோ லோகத்தில் நிலையின்றி மிதக்கும் மனக் கற்பனையாளர்கள் உள்ளனர். கவிதைகளையும் தத்துவங்களையும் இயற்றி, ஏதோவொரு புதிய கொள்கையினை உடல் மற்றும் மனதிற்கு உட்பட்ட அதே சுயநலத்துடன் பிரச்சாரம் செய்வது இவர்களது தொழிலாகும். ஆனால் உடலையும் மனதையும்விட மேலே இருப்பது ஆன்மீக ஆத்மாவாகும். அந்த ஆத்மா உடலிலிருந்து பிரிந்துவிட்டால், உடலையும் மனதையும் சார்ந்த சுயநலன்கள் அனைத்தும் நின்று சூன்யமாகிவிடுகின்றன. ஆனால் குறை புத்தியுடையோர் ஆன்மீக ஆத்மாவின் தேவைகளை அறியாதவர்களாக உள்ளனர்.

ஆத்மாவைப் பற்றிய தகவல்களையும், ஆத்மா எவ்வாறு உடலையும் மனதையும் கடந்த நிலையில் உள்ளது என்பதைப் பற்றியும் மூடர்கள் அறியாத காரணத்தினால், அவர்கள் தங்களுடைய தொழில்களைச் (கடமைகளைச்) செய்வதில் திருப்தியடைவதில்லை. ஆத்மா என்பது, ஸ்தூல உடலுக்கும் சூட்சுமமான மனதிற்கும் அப்பாற்பட்டதாகும். அவனே உடலையும் மனதையும் இயக்கக்கூடிய ஆற்றல்மிக்கவன். உள்ளிருக்கும் ஆத்மாவின் முக்கியத்துவத்தை அறியாமல், உடலாலும் மனதாலும் கிடைக்கும் இலாபத்தினால் மட்டும் ஒருவர் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. உடலும் மனமும் ஆன்மீக ஆத்மாவை மூடியுள்ள உறைகள் மட்டுமே. ஆன்மீக ஆத்மாவின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். பறவையின் கூண்டினை சுத்தப்படுத்துவதால் மட்டும் பறவையைத் திருப்திபடுத்த முடியாது. பறவையின் தேவைகளை உள்ளபடி அறிந்திருக்க வேண்டும்.



பறவையின் கூண்டினை சுத்தப்படுத்துவதால் பறவையைத் திருப்திப்படுத்த முடியாது; உடலைப் பராமரிப்பதால் ஆத்மாவைத் திருப்திப்படுத்த முடியாது.

பௌதிக பந்தத்தின் எல்லையிலிருந்து விடுபட்டு, பூரண சுதந்திரத்தைப் பெறுவதே ஆன்மீக ஆத்மாவின் தேவையாகும். மாபெரும் பிரபஞ்சத்தை மூடியிருக்கும் சுவர்களைத் தாண்டிச் செல்ல அவன் விரும்புகிறான். சுதந்திர ஒளியையும் ஆன்மீக உலகையும் அவன் காண விரும்புகின்றான். பரிபூரண ஆத்மாவான முழுமுதற் கடவுளைச் சந்திக்கும்போது, அவன் அத்தகு பூரண சுதந்திரத்தை அடைகின்றான். கடவுளின் மீதான பற்றுதல் ஒவ்வொருவருக்குள்ளும் உறங்கிய நிலையில் இருக்கின்றது; ஆத்மாவின் தன்மையானது, ஸ்தூல மற்றும் சூட்சும விஷயங்களின் மீதான திரிபடைந்த பற்றுதலின் வடிவில், ஸ்தூல உடல் மற்றும் மனதின் வழியாக வெளிப்படுகிறது. எனவே, நமது திவ்யமான உணர்வை எழுப்பக்கூடிய தொழில்களில் (செயல்களில்) நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். பரம புருஷரின் தெய்வீகச் செயல்களைக் கேட்பதாலும் பாடுவதாலும் மட்டுமே இது சாத்தியமாகும். முழுமுதற் கடவுளைப் பற்றிய திவ்யமான தகவல்களைக் கேட்பதிலும் சொல்வதிலும் பற்றுதலை வளர்த்துக் கொள்வதற்கு உதவி செய்யாத தொழில்கள், கால விரயமே என்று இங்கு கூறப்பட்டுள்ளது. ஏனெனில், இதர தொழில்கள் (அவை எந்த மதக் கொள்கையாக இருந்தாலும்) ஆத்மாவிற்கு முக்தியை வழங்க இயலாதவை. முக்தியை குறிக்கோளாக வைத்திருப்பவர்களின் செயல்கள்கூட பயனற்றவை; ஏனெனில், அவர்கள் முக்திக்கு ஆதாரமாக விளங்குபவரை ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர். இவ்வுலகிலும் சரி, மறுவுலகிலும் சரி, தான் பெறும் பௌதிக இலாபங்கள், காலத்திற்கும் இடத்திற்கும் உட்பட்டது என்பதை முழு பௌதிகவாதியாக இருப்பவனும் கண்கூடாகக் காணமுடியும். அவன் ஸ்வர்க லோகம் வரை சென்றாலும், ஏக்கத்திலிருக்கும் அவனுடைய ஆத்மாவிற்கு உகந்த நிரந்தரமான வசிப்பிடத்தை அவனால் கண்டுபிடிக்க முடியாது. ஏக்கத்திலிருக்கும் ஆத்மாவைப் பக்குவமான பக்தித் தொண்டு என்னும் பக்குவமான விஞ்ஞான வழிமுறையினால் மட்டுமே திருப்திப்படுத்த முடியும்.

## ஸ்லோகம் 9

தர்மஸ்ய ஹ்யாபவர்க்யஸ்ய நார்தோ 'ர்தாயோபகல்பதே
நார்தஸ்ய தர்மைகாந்தஸ்ய காமோ லாபாய ஹி ஸ்ம்ருத:

## மொழிபெயர்ப்பு

எல்லாவித தர்மங்களும் (தொழில்களும்) இறுதி முக்தியை வழங்குவதற்காகவே என்பது நிச்சயம். அவை ஜட இலாபத்திற்காக ஒருபோதும் செய்யப்படக் கூடாது. மேலும், சாதுக்களின் கருத்துப்படி, இறுதியான உத்தியோகத் தொண்டில் ஈடுபட்டிருப்பவர் புலனின்பத்தை வளர்ப்பதற்காக ஜட இலாபத்தை பயன்படுத்தவே கூடாது.

## பொருளுரை

பகவானின் தூய பக்தித் தொண்டைப் பின்தொடர்ந்து, பக்குவமான அறிவும் பௌதிக வாழ்வின் மீதான பற்றின்மையும் தானாக வருகின்றன என்பதை நாம் ஏற்கனவே விவாதித்தோம். ஆனால், மதம் உட்பட எல்லா தர்மங்களுமே ஜட இலாபத்திற்காகச் செய்யப்படுகின்றன என்று எண்ணுபவர்கள் உள்ளனர். உலகின் எந்தப் பகுதியில் இருக்கும் எந்த சாதாரண மனிதனின் பொதுவான மனப்பாங்கு என்னவெனில், மதச் செயல்கள் அல்லது எந்தவொரு இதர தொழில்களைச் (கடமைகளைச்) செய்தாலும், அதற்குப் பலனாக ஏதேனும் பௌதிக இலாபத்தை எதிர்பார்க்கின்றனர். வேத இலக்கியங்களில்கூட, மக்களைக் கவருவதற்காக எல்லாவித சமய அனுஷ்டானத்திற்கும் பௌதிக இலாபம் கொடுக்கப்பட்டுள்ளது, பெரும்பாலான மக்கள் அத்தகு வசீகரிக்கும் பொருள்களால் அல்லது சமயத்தின் ஆசிர்வாதத்தினால் கவரப்படுகின்றனர். சமயப் பற்று உள்ளவர்கள் என்று கூறிக்கொள்ளும் அத்தகைய மனிதர்கள் ஏன் பௌதிக இலாபத்தால் வசீகரிக்கப்படுகின்றனர்? ஏனெனில், பௌதிக இலாபத்தினால் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும், அதன் மூலம் புலனுகர்ச்சியை திருப்திப்படுத்த முடியும். பெயரளவிலான மதச் செயல்கள் உட்பட இதர கடமைகளை உள்ளடக்கிய இந்த தொழில் சுழற்சியினால், பௌதிக இலாபம் அடையப்படுகின்றது; பௌதிக இலாபத்தைத் தொடர்ந்து ஆசைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. தொழிலில் முழுமையாக ஆழ்ந்துள்ள பலதரப்பட்ட மனிதர்களுக்கும் புலனுகர்ச்சியே பொதுவான பாதையாகும். ஆனால் ஸ்ரீமத் பாகவதத்தின் தீர்ப்பின்படியும், சூத கோஸ்வாமியின் கூற்றின்படியும், இக்கருத்து இந்த ஸ்லோகத்தில் முறியடிக்கப்படுகிறது.

ஒருவன் எந்தவொரு தொழிலிலும் பௌதிக இலாபத்திற்காக மட்டும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது. அதுமட்டுமின்றி, பௌதிக இலாபத்தை புலனின்பத்திற்காகப் பயன்படுத்தவும் கூடாது. பௌதிக இலாபத்தினை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. (தொடரும்)

# சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

# Wanted

## Male DTP Operator (for Bhaktivedanta Book Trust)

**Softwares to be known:** Ms-Office, Adobe Indesign (or at least Pagemaker), Adobe Photoshop. Knowledge of Coral draw will be an added advantage.

**Typing skills:** Both English & Tamil (atleast one should be known with the interest to learn the other in a short period)

**Age limit:** Preferably below 25, and maximum of 30 years

**Experience:** Atleast basic experience in DTP or related works

**Job location:** Perambur, Chennai

Devotionally inclined candidates fulfilling the above requirements can send their resume to our Subscription office along with expected salary.

Bhagavad Darisanam, ISKCON,
7C, Vasan Street, Perambur, Chennai - 600011.
Ph: 98948 14553. Email: tamilbtg@gmail.com


## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(ஜுன் 1, 2011 முதல் ஜுலை 15, 2011 வரை)**

### ஜுன்

11, சனி, ஸ்ரீ பலதேவ வித்யாபூஷணர் மறைவு நாள்

12, ஞாயிறு, பாண்டவ நிர்ஜல ஏகாதசி விரதம்
(மற்ற ஏகாதசிகளைப் பின்பற்றும்போது ஏதேனும் தவறு நேர்ந்திருந்தால் இந்த ஏகாதசியைத் தண்ணீர்கூட அருந்தாமல் பின்பற்றுதல் உகந்தது)
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:52–08:20

14, செவ்வாய், பானிஹாட்டி சிடா ததி உற்சவம்

15, புதன், பூரி ஸ்ரீ ஜகந்நாதர் ஸ்நான யாத்திரை
ஸ்ரீ முகுந்த தத்தர் மறைவு நாள்
ஸ்ரீதர பண்டிதர் மறைவு நாள்

16, வியாழன், ஸ்ரீ சியாமானந்த பிரபு மறைவு நாள்

26, ஞாயிறு, ஸ்ரீ ஸ்ரீவாஸ பண்டிதர் மறைவு நாள்

27, திங்கள், யோகினி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:55–10:10

### ஜுலை

1, வெள்ளி, ஸ்ரீ கதாதர பண்டிதர்
ஸ்ரீல பக்திவிநோத தாகூரர் மறைவு நாள்

3, ஞாயிறு, பூரி ஜகந்நாதர் ரதயாத்திரை
ஸ்ரீ ஸ்வரூப தாமோதர கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீ சிவானந்த சேனர் மறைவு நாள்

11, திங்கள், ரதம் திரும்ப வரும் நாள்
சயன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 05:59–10:13

15, வெள்ளி, குரு பூர்ணிமா
ஸ்ரீல சனாதன கோஸ்வாமியின் மறைவு நாள்
சாதுர்மாதத்தின் முதல் மாத தொடக்கம்
(கீரை வகைகளிலிருந்து விரதம்)

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.



ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே


தங்கமயில்
தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்
அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி
351, WGC. ரோடு, தூத்துக்குடி
போன்: 0461 2337553